96

# கும்பாபிஷேக சிறப்பு மலர்



## வட்டு வடக்கு
## பிரமனாச்சித் தோட்டம்
## கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்

**03.07.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டு- வடக்கு
பிரமனாச்சித் தோட்டம்
கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்

# கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

இரண்டாயிரத்தோடினோர் பதினொன்று கர ஆண்டு
தமிழ்ரானி பதினெட்டு வளர் பிறை துதியை திதிநாளில்
கண்டாரெம் வட்டுநகர் கற்பகப்பிள்ளையார் தன்கழல்
போற்றும் கும்பாபிஷேகமது சிறப்புறவே வாழி வாழி

*மலர் ஆசிரியர்*
*புண்ணியமூர்த்தி ஸ்ரீ விக்னேஸ்வரன்*

**வெளியீடு**
**கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்**
**19.09.2012**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேக, மஹோற்சவ பிரதம குருவின் ஆசியுரை

தெய்வீகம் நிறைந்த வட்டூர் பிரமனாச்சித்தோட்டம் பதியில் கோயில் கொண்டு அருள்பாலித்து வரும் கற்பகப் பிள்ளையார் பிரம்மோற்சவத்தில் கும்பாபிஷேக மலர் வெளிவருவதை இட்டு மிக மனம் மகிழ்கின்றேன். இவ் ஆலயத்தில் நிகழ்வனவெல்லாம் காலம் அறிந்தும் ஆகம விதிகளுக்கு ஏற்ற வகையில் நீண்ட காலமாக நடைபெற்றுவருகின்றது. பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை தவறாது கும்பாபிஷேகம் நடந்து வருகின்றது.

இம்முறை மிகவும் குறுகிய காலத்தில் பாலஸ்தாபனம் நடந்து கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. பல தத்துவ ரீதியாக கூறப்பட்டு வரும் எம்பெருமானின் வழிபாடுகள் நம் நாட்டில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் மேலோங்கி வருகின்றது. காணபத்தியர் விநாயகப் பெருமானின் வடிவம் ஓங்காரம் என்னும் பிரணவப் பொருளை குறிக்கும் என்பர். மூலாதார சக்தியின் வடிவமாக விளங்கும் விநாயகப் பெருமானே உலகம் அனைத்தும் படைத்துக்காத்து அழிக்கும் ஆற்றல் உடைய பரம்பொருள் என்று மொழிவர்.

எம்பெருமானது கும்பாபிஷேகம் பலருடைய அயராத தொண்டுகளினாலும் அன்பளிப்புகளாலும் சரீர உதவியினாலும் நல்ல வர்ணவேலைகளுடன் நடைபெற்றுள்ளது. இம்முறை எம்பெருமானுக்கு புதியதோர் தீர்த்தக் கேணிகூட உருவாகி உள்ளது. இவ் புனித கைங்கரியத்தை ஏற்று நடாத்திய உபயகாரர்கள் பாராட்டுதற்குரியவர்கள். மேலும் இம் மலர் நன்கு மலர்ந்து வட்டூர் பகுதியிலும் அதைச்சூழ்ந்து விளங்கும் சைவ உலகிலும் தெய்வ மணம் பரப்பவும் அனைத்தையும் வெளிப்படுத்து முகமாக இம்மலர் மலர்கின்றது. மென்மேலும் எனதுநல்லாசிகளை விநாயகர் பாதம் பணிந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவாகம கிரியா தத்துவநிதி
வேதாகமகிரியா ரத்தினம்
ச.மு.பாஸ்கர (ரவி) க்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளின்**

# அருளாசிச் செய்தி

## விநாயகர் அடியார்களுக்கு

பிரமனாச்சி தோட்டத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் கற்பகபிள்ளையாருக்கு கும்பாவிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி யடைகிறோம். முழுமுதற்கடவுளாக விளங்கும் விநாயகப்பெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு வலி-மேற்கு பிரதேசத்தில் இவ்வாலயத்தில் அமர்ந்திருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது ஊர்மக்களுக்கும், ஊருக்கும் சிறப்பை பெற்றுத்தருவதாகும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் நடைபெறுவது ஆலயத்திற்கும், ஊருக்கும் சிறப்பை பெற்றுத்தருவதாகும். கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் எனும் வாக்கிற் அமைய கற்றவர்களும் கற்றபடி ஒழுங்குபவர்களும் நிறைவாக வாழ்ந்து இயம்புவதும் பல ஆலயங்களை கொண்டு விளங்குவதும் இவ்வூரினையுடைய தனித்துவமாகும். விநாயக வழிபாடு நற்சமயத்தினுடைய ஆதாரமான நிலையாகும். எழிமையான முறையில் வழிபாடு செய்து அருளைப்பெறும் நிலையே விநாயக வழிபாடு. விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் வழிபாடு செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ வாழ்த்துகின்றோம். இப்புனிதப்பணியை நடாத்தும் குருமார்களுக்கும் ஆலய தர்மகர்த்தா, ஊர் மக்கள் அனைவர்க்கும் இறைவனுடைய அன்பு கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவஸ்தான குரு பிரம்மஶ்ரீ ச.நந்தராஜசர்மா அவர்களின்
# ஆசியுரை

ஆன்மாக்களுக்கு இறைவன் அளிக்கின்ற பிறவிகள் பலவற்றுள் மனிதப்பிறவி கிடைத்தற்கரியது. ஆறறிவினைக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்துநன்மை தீமைகளைப் பகுத்தறிந்து ஆராய்ந்து இறைவனின் பெருங்கருணையைப் பெற வேதாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிகளை கூறுகின்றன. இவ்வகையான தெய்வ வழிபாட்டில் கிரியை வழிபாடே ஆகமங்களில் அதி முதன்மையும் முக்கியமும் பெறுகின்றது. இறைவனைப் போற்றித் துதிக்க உருவ வடிவிலும், கும்ப வடிவிலும், யந்திர வடிவிலும் வழிபடும் முறைகள் கிரியை மார்க்கத்தில் அதிகம் கூறப்பட்டுள்ளன. இவ்வழிபாடுகள் அனைத்தும் முழுமை அடையும் இடம் ஆலயமே ஆகும்.

அவ்வாறு நாம் எந்த தெய்வத்தை பூஜிக்க விரும்புகின்றோமோ அந்த தெய்வத்தின் உருவம் மற்றும் யந்திரத்தை மந்திரபூர்வமாகவும், கிரியைபூர்வமாகவும் பிரதிஷ்டை செய்யும் கிரியையே கும்பாபிஷேகம் ஆகும். அந்தவகையில் ஈழவள நாட்டின் யாழ்ப்பாண நன்நகரின் வடபால் சித்தங்கேணிக் கிராமத்தில் பிரமனாச்சித் தோட்டத்து கற்பக விநாயகர் ஆலயத்தின் வழிபாடுகளும், பூஜைகளும் சிறந்தமுறையில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இந்த வருடம் 03.07.2011 நடைபெற்ற இம்கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடந்தேறியது.

மென்மேலும் வழிபாடுகளும் பூஜைகளும் கற்பக மூர்த்திக்கு எவ்வித தடையுமின்றி நடைபெறவும் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து சிறப்பித்த மற்றும் தொண்டாற்றிய அடியார்களும் கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து மெய்யடியார்களும் கல்வி கலைகளில் சிறந்து பெருஞ்செல்வம் பெற்று என்றும் கற்பக விநாயகனின் சேவையில் திளைத்திருக்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் கூறி அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற் செல்வரின் ஆசியுரை

வட்டுதிருவூர் கற்பக விநாயகர் திருக்கோவிலில் கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து புதியதோர் தீர்த்தத் தடாகம் உருவாக்கப்பட்டமை குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். இப்புதிய தீர்த்த நாடகத்திற்கு விநாயகர் புராணத்தில் கூறப்படும் புண்ணிய தீர்த்தமாகிய கணேசகுண்டத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளமை தனிச்சிறப்பு வாய்ந்த விடயமாகும். இந்திரன் முதல் பல முனிவர்களின் பாவ வினைகளை நீக்கி விமோசனம் கொடுத்த விநாயகரின் அற்புத தீர்த்தமே கணேசகுண்டம் ஆகும். ஈரேழு உலகமும் ஓய்ந்தாலும் கணேசகுண்டத்தின் தீர்த்தம் வற்றாது என்பது புராணம் கூறும் மகத்துவமாகும்.

வட்டு கற்பக விநாயகர் அற்புதம் நிறைந்தவர், தன்னை நாடி வந்து வழிபாடு செய்பவர்களுக்கு சகல அருட்கடாட்சங்களையும் அள்ளிக் கொடுத்தவர். கலையால், கல்வியால், நிதியால் நிறைவு கொடுத்து அனைவரையும் உள்ளம் நிறைவோடு வாழ வைப்பவர். பக்தர்களுக்கு சோதனைகளும் வேதனைகளும் காட்டி அவர்களின் பிறவி வினைகளை நீக்கும் திருவிளையாடலை விநாயகப் பெருமான் செய்வது வழக்கம். எதுவரினும் நீயே கதியென்று இருப்பவருக்கு குறைவில்லை கற்பகவிநாயகர் கருணை நிறைந்தவர். தன்நாமத்தால் அடியார்கள் திருப்தியாக வழிபாடு செய்ய காலத்திற்கு காலம் சில பக்தர்களின் உள்ளத்தில் புகுந்து காரியங்களை நிறைவேற்றுவார். எனவே தனித்தனி குடும்பங்கள் ஒவ்வொரு கைகங்கரியங்களையும் நிறைவேற்றக்கூடிய தன்மையை கொடுத்து அவற்றை இரசிக்கிறார்.


எல்லோருடைய அகத்தையும் புறத்தையும் கழுவக்கூடிய ஆற்றல் தண்ணீராகிய தீர்த்தத்திற்கே உண்டு. பஞ்சபூதங்களில் ஒன்றாகிய நீருக்கு எம் முன்னோர்கள் உயர்ந்த மதிப்புக் கொடுத்தனர். எண்ணிறைந்த உயிர்களின் தாகத்தை தீர்க்கும் கேணிகளை, குளங்களை முன்னோர்கள் தர்மபணியாக கருதி கட்டுவித்தனர். அவை மகத்தான ஜீவகாருண்ய பணியாக கருதப்பட்டது. குடிமனைகளின் நீருற்றுக் களையும், கோவில் கேணிகள், குளங்கள் காத்தருளின. ஆனால் இன்றுபல குளங்களையும் கேணிகளையும் தூர்ந்து அழிந்து போக எம்சந்ததியினர் கைவிட்டு விட்டனர். இதனால் இயற்கை எம்மோடு கோவித்துக் கொண்டது. வான்மழை குறைந்துவிட்டது. நீர் ஊற்றுக்கள் ஓய்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகரின் கருணையினால் திரு.முருகேசபிள்ளை தவபாலன் குடும்பத்தவர்களின் பேருதவியால் புண்ணிய நீர்ச்சுனை உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இக்கிராமத்து மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் நற்பயன் பெறுபவர் என்பது உண்மை. கற்பகப் பிள்ளையார் மூர்த்தி, தலம், தீர்த்தம் யாவும் முறையாக அமைந்தநிலையில் எல்லோருக்கும் கீர்த்தி வடிங்குகுறிறார் என்பதில் ஐயமில்லை என இனிய வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் கூறி அமைகிறேன்.


"யாவர்க்குமாம் என்றும் இன்னுரை தானே"

கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்.துர்க்காதேவி தேவஸ்தானம்,
தாபகர், சிவபூமி அறக்கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கும்பாபிஷேகம் 1999



தேர்த்திருவிழா 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடியேற்றம்-1999



தீர்த்தக்கேணி - 2012



தேர்த்திருவிழா 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










கும்பாபிஷேகம்-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சித் தோட்டம்

# அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான

## பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

கற்பகன் அடியார்களே!

... வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சித் தோட்டம் ... வரும் ஆனி மாதம் 18 ஆம் நாள் (03.07.2011) ...

## கும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகள்

**ஆனி மாதம் 14 ஆம் நாள் (29.06.2011) புதன்கிழமை**

காலை 9.00 மணிக்கு ...

**ஆனி மாதம் 15 ஆம் நாள் (30.06.2011) வியாழக்கிழமை**

**ஆனி மாதம் 16 ஆம் நாள் (01.07.2011) வெள்ளிக்கிழமை**

மாலை 04.00 மணி முதல் ...

**ஆனி 17 ஆம் நாள் (02.07.2011) சனிக்கிழமை**

காலை 09.00 மணிமுதல் ...

மாலை 05.00 மணிமுதல் ...

**காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை எண்ணெய் சாத்துதல் இடம்பெறும்.**

**ஆனி 18 ஆம் நாள் (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை**

காலை 06.00 மணிமுதல் ...

சிவஸ்ரீ. ச.மு.பாஸ்கரக் (ரவி) குருக்கள்

சிவஸ்ரீ இ.சு.முரளிதரக் குருக்கள்

பிரம்மஸ்ரீ ச.கி.திருஞானசர்மா

பிரம்மஸ்ரீ ச.தந்கராஜ சர்மா

சிவஸ்ரீ. ச.மதுசூதனக் குருக்கள்

சிவஸ்ரீ. பா.பாலகுமாரக் குருக்கள்

சிவஸ்ரீ. பா.பாலகிருஷ்ணக் குருக்கள்

சிவஸ்ரீ. கை.கிருஷ்ண குமாரக் குருக்கள்

சிவஸ்ரீ. க.வைத்தீஸ்வரக் குருக்கள்

சிவஸ்ரீ. சோ.கணேசராஜாக் குருக்கள்

பிரம்ம ஸ்ரீ சோ. சண்முகராஜா சர்மா

பிரம்ம ஸ்ரீ அ. மகேஸ்வரசர்மா

பிரம்மஸ்ரீ. அ. மந்குரு சர்மா

பிரம்ம ஸ்ரீ பா. ஜனார்த்தன சர்மா

திரு. ஆறுதிருமுருகன்

மங்கள வாத்தியம்

இ.கண்ணன் குழுவினர்

(சித்தன்கேணி)

உ.பொன்னுமூர்த்தி குழுவினர் (பொன்னாலை)

இ.தங்கராசா

(சித்தன்கேணி)

இவ்வண்ணம்

ஆறுமுகம் புண்ணியமூர்த்தி

குடும்பத்தினர்.

வட்டு வடக்கு,

சித்தன் கேணி.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் ஆதீனம் அமைத்த ஸ்ரீமத் சுவாமிநாத தம்பிரான்

*கலாநிதி. ஆறு திருமுருகன்*

சித்தாந்த சைவம் மிக மிக தொன்மையானது. அது தொன்மைக்கும் அது பரந்து நிலவிய தன்மைக்கும் சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சி முடிவுகளும் உறுதியளிக்கின்றன. சைவ நெறியில் மக்கள் வாழ்வதற்கும் அதினின்று விலகியிருப் போருக்கு உய்வுநெறி காட்டுவதற்கும், உறுதுணையாய் இருப்பவை சைவ ஆலயங்கள், சைவப்பள்ளிக்கூடங்கள், சைவ ஆதினங்கள் என்பன. ஆதீனங்கள் பக்தியை, பண்பை வளர்க்கவும், பள்ளிக்கூடங்கள் அறிவை வளர்க்கவும் பெரிதும் உதவுவன.

முதலாவது ஆலயம் எங்கே எப்போது கட்டப்பட்டது என அறிதியிட்டுக்கூற முடியாது. எனினும் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே அது இருந்தது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். முதலவாது சைவப் பாடசாலை கல்லால் மர நிழலின் கீழ்நான்கு மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்டது. காலம் எதுவெனக் கணிப்பிட முடியவில்லை. முதலாவது ஆதீனம் பன்னூற்று ஆண்டுகட்கு முன்னர் மதுரையில் தொடங்கப்பெற்ற திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆகும். இது மங்கையற்கரசியாரின் வேண்டுகோளிற்கு இணங்க திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மதுரைக்கு எழுந்தருளி வந்து தங்கியிருந்ததும், சமணரால் தீ கொளுத்தப்பட்டதுமான மடத்தில் தொடங்கப்பெற்றது. ஆதீன பரம்பரையில் தற்போது பீடாதிபதியாக அருள் ஆட்சி செய்பவர் 292வது குருமகா சந்நிதானம் ஆவார். மதுரை ஆதீனம் தோன்றிய பின் சைவத்துறை விளங்கும் பொருட்டு அருளாளர்களால் வேறும் பல ஆதீனங்கள் அவ்வப்போது தொடக்கப்பெற்றன. இவற்றுள் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருவண்ணாலை குன்றக்குடி ஆதீனம், காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனம், திருப்பனந்தாள் காசி மடம் என்பன சில.

தமிழ்நாட்டில் பல்வேறு ஆதீனங்கள் தோன்றிப் பல காலமாகப் பணிபுரிந்து வருகின்றனவேயெனினும், தேவாரப்பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரம் திருக்கோணமலை யிலுள்ள திருக்கோணேஸ்வரம் ஆகிய சிவ ஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஈழ நாட்டில் ஓர் ஆதீனம் இல்லாமை பெருங்குறையாக இருந்தது. சைவத்துக்கும், தமிழுக்கும் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துச் சேவை செய்த நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே இக்குறையை வெளிப்படுத்தி மனம் மிக வருந்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச்சைவ நன்மக்களின் தவப்பயனாக 1966ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை ஸ்ரீமத் சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள் நிறுவினார்கள். இவர்கள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மகாசந்நிதானத்தை குருவாகப் பெற்று மந்திரோபதேச காஷாயமும் வாங்கிக் கொண்டார்கள்.

தம்பிரான் ஸ்வாமிகள் 1977ம் வருடம் ஆவணி மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் நல்லை ஆதீனக் குரு முதல்வராக அபிஷேகம் செய்து ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் எனத் திருநாமம் கொண்டார்கள்.

சித்தாந்த வித்தகர் பிரம்மஸ்ரீ செந்திநாதஐயர், இலக்கணப் பேரறிஞர் வித்துவான் கணேசஐயர் ஆகியோரது பேரனான பிரம்மஸ்ரீ.செல்லையாக்குருக்கள், கனகாம்பாள் அம்மை ஆகியோருக்கு மகனாக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் பிறந்தவர் சிவசுப்பிரமணிய ஐயர், இவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையிலும், யாழ். இந்துக்கல்லூரியிலும் கல்விபயின்று, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் பயிலும் காலத்தில் அவரது நாட்டம் புகழ் பெற்ற சங்கர சுப்பையர் சுவாமிகளின் இன்னிசை விரிவுரைகளிலேயே சென்றது. இக்கலையில் அந்நாட்களில் தன்னிகரற்று விளங்கிய சுவாமிகள் சைவத்தையும், சைவத் திருமுறைகளையும் யாழ்ப்பாண மக்களின் நெஞ்சில் பதித்தார். இவருடைய பிரசங்கங்கள் எங்கு நடந்தாலும் நிழல் போல் இவரைத் தொடர்ந்து சென்று அனுபவித்து வந்தான். சிறுவன் சிவசுப்பிரமணியன், அவரைப்போல் தானும் கதை செய்யவேண்டும் என்ற பேரவா சிறுவனைப் பிடித்துக் கொண்டது. சிறுவனின் ஆர்வத்தை அறிந்த சுவாமிகள் தமக்குப்பின் இக்கலையில் புகழ்பெற்று விளங்கக்கூடியவன் என அவர் உள்ளுணர்வு தெரிவித்தமையினால் மணி ஐயருக்கு தமது சுருதி வாத்தியத்தை வழங்கி ஆசீர்வதித்தார்.

தமது பதினெட்டாவது வயதில் இன்னிசை விரிவுரை நடத்த தொடங்கிய சிவசுப்பிரமணியஐயர் நாளடைவில் சுவாமிகளின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புதற்கு தகுந்தவர் ஆனார். வண்ணை சி.எஸ்.எஸ்.மணி ஐயர் என்ற பெயரில் புகழடைந்த இவர் நாடகம், நடனம், ஓவியம் ஆகிய துறைகளில் சிறந்த விற்பன்னராயிருந்தார். தமது முறைப் பெண்ணான யோகாம்பாள் என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்று முருகானந்த சர்மா என்பவரைப் புத்திரராகப் பெற்றார். மணி ஐயரின் கதாப்பிரசங்கங்களின் பிரபல்யமடைய அவர் மணிபாகவதர் ஆனார். அவரது கதாகலாட்சேபங்கள் இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளிலும் பெரிதும் மக்களை கவருவதாயிற்று. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராண பிரசங்கங்களும் இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களின் தொடர் கதாப்பிரசங்கங்களும் பலப்பல முறைகள் செய்துள்ளார். இராமாயணம் தொடர் பிரசங்கம் 25-40 நாள் வரை நீடிக்கும். இதனை 40 தடவைக்கு மேல் செய்துள்ளார். இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை விரிவுரைகளில் திருமுறைகள், திருப்புகழ், அநுபூதி, அலங்காரம், அபிராமி யந்தாதி, பிள்ளைத்தமிழ் ஆகிய எல்லாம் பொங்கிவழியும். தத்துவார்த்த விளக்கம் நிறைந்திருக்கும் பக்திச்சுவை நிறைந்த இவரின் விரிவுரைகள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன 291வது குருமகா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தர் பரமாசாரிய ஸ்வாமிகள் திருவுள்ளத்தில் ஒரு குறிப்பை தோற்றுவித்தது. அதன் பிரகாரம் மணி பாகவதர் 1966ம் ஆண்டில் இல்லற வாழ்வைத் துறந்து சந்நிதானத்திடம் மந்திரோபதேசமும், காஷாயமும் பெற்று குருமகாசந்நிதானம் ஆனார்.

நல்லை ஆதீனம் பொருள் வளம் படைத்ததன்று. ஆயினும் அருள் வளம் நிரம்பவுடையது. பணம் இல்லையெனினும் அங்கு பண்பு நிலவுகிறது. ஆதீன சம்பிரதாயங்களைக் கட்டிக் காத்து வருகின்றது. நல்லை ஆதீன முதல்வர் போன்று சமயப் பிரசாரத்துக்காக மன, மொழி, மெய்களால் அரும்பாடுபட்ட ஆதீன கர்த்தரின் ஆதீனப் பணிகள் பெருகிக் கொண்டே வந்தன. ஆதீனத்தில் மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளைத் தவிர இலவச சமய தீட்சை, விசேட தீட்சை, உபநயனம், திருமணக் கிரியை, தேவபாராயணம், திருமுறைப்பாராயணம், சமயபாட வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள், யோகாசனம் போன்றனவும் மகேசுரபூசை, மகாநாடுகள், விழாக்கள், யாத்திரிகர்களை உபசரித்தல் முதலியனவும் ஆதீனப் பணிகளுள் சில.

தொடங்கப்பெற்ற ஆதீனம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற பெருவிருப்பு ஸ்வாமிகள் திருவுள்ளத்தில் எழுந்ததால் சிறியவர்களும், பெரியவர்களுமான பலரை ஆதீனத்தில் சேர்த்து உணவும், உறையுளும் வழங்கி அவர்களை சிவப்பணியில் ஈடுபடுத்த முயன்றார்கள். சுவாமிகள் தெரிந்தெடுத்த சிறுவன் சுந்தரலிங்கத்தை தமது ஞான பரம்பரைக்கு உகந்தவன் என கண்டு 7.4.1977ல் மந்திரோபதேசம் செய்தார். இவரே இன்றைய ஆதீன முதல்வர். இவர்சிறந்த சிவபக்தர், பண்பாளர், அமைதியாகப் பேசுபவர். பழக இனியவர், பார்வைக்கு எளியவர். இவர் சிவபூசை செய்வதைக் காண்போர் பரவசமடைவர். சைவத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் பெருமை சேர்க்கும் இன்றைய எமது இவ் நல்லை ஆதீன முதல்வரை வணங்கி இனிது வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் கற்பகன் திருவருளே

0307.2011இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகப் பெருவிழாவினை கண்டு, மகிழ்ந்து தரிசிக்கும் பேறு கிடைக்க வழிசெய்த கணேசனைப் போற்றித் துதித்திடுவோம்.

ஆலயங்களில் 12 ஆண்டுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெறவேண்டுமென்ற ஆகமவிதிப்படி எமது ஆலயத்திலும் 1987, 1999, 2011 ஆகிய காலங்களில் மகாகும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற வைத்த பெருமானின் திருப் பெருங்கருணையின் திறம்பற்றி சிந்திக்காமல் இருக்கமுடியாது. இறையருளுடன் கற்பகன் மீளா அடியவர்களின் உதவியும் இதில் பெரும் பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கது.

1987இல் ஆலய கருவறை விமானம் இரட்டைப் பஞ்சாஞ்ச ஸ்தூபியாக உயர்வு பெற பிரதமகுருவாக வணக்கத்திற்குரிய மயிலினி பிரம்மஸ்ரீ.சி. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள் 01.06.1987ல் கும்பாபிஷேகப் பெருவிழாவை பக்திப்பரவசத்துடன் நடாத்தி அடியார்களையும், ஆலயத்தையும் எளிச்சி பெறவைத்தார்.

1999இல் ஆலயத்தில் மஹோற்சவம் நடைபெறக்கூடிய வகையில் கொடிமரம், யாகசாலை அமையப்பெற பிரதமகுருவாக வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ.ச.மு.பாஸ்கரக்குருக்கள் அவர்கள் 04.07.1999 இல் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவை கற்பகனின் திருவருளால் பக்தி உணர்வு மேலோங்க நடாத்திவைத்தார்.

05.09.1999இல் பெருமானின் கருணையினால் மஹோற்சவ குரு சிவஸ்ரீ.ச.மு.இபாஸ்கரக்குருக்கள் அவர்களால் ஏற்றப்பட்ட ஆலயத்தில் முதலாவது கொடியேற்றத்தை மகிழ்வுடன் தரிசிக்கும் பேறு யாபேருக்கும் கிடைத்தது. தொடர்ந்து 13.09.1999இல் முதன் முதலாக கணேசப் பெருமான் காட்டுத்தேரில் வீதிவலம் வந்து அடியார்கட்கு அருள்வழங்கி, ஆனந்தப்படுத்தி பரவசம் அடையச்செய்தார்.

29.10.2001இல் சிவஸ்ரீ.ச.மு.பாஸ்கரக்குருக்கள் அவர்களால் பஞ்சமுக விநாயகர் நூதனப்பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியது. 18.09.2004இல் புதிய சித்திரத்தேரில் எம்பெருமான் வீதிவலம் வந்து அடியார்கட்கு ஆசீர்வதித்து மகிழ்வித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*29.10.2001*இல் சிவஸ்ரீ.ச.மு.பாஸ்கரக்குருக்கள் அவர்களால் சண்டேஸ்வரர் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. *04.07.2006*இல் சந்தான கோபாலர், இராஜராஜேஸ்வரி அம்பாள், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ.ச.மு.பாஸ்கரக்குருக்கள் அவர்களால் சிறப்பான முறையில் நடைபெற்றது.

*19.04.2011*இல் ஆலயத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்றது. தொடர்ந்து சில திருத்தவேலைகளும், கூரைவேலைகளும், வர்ணவேலைகளும் இடம்பெற்றது. கருவறையின் உட்புறம், கருங்கற்கள் பதிக்கப்பட்டன. கொடிமரத்தை முழுமையாக பூசிக்கும் வகையில் மர ஊசிக்கால்கள் அகற்றப்பட்டு இரும்பு கேடர்கள் பொருத்தப்பட்டு மட்டச் சீற் மூலம் மண்டபக்கூரை அழகுபடுத்தப்பட்டன. இக்கூரை வேலைகளை அனைத்தையும் திரு.ச.தவேந்திரன் அவர்கள் மேற்கொண்டதுடன் இதற்கான செலவையும் பொறுப்பேற்றுக் கொண்டார். கூரைக்கான இரும்புக்கேடர்களை சிறந்த முறையில் ஆக்கிய திரு.சி.பகீரதன் அவர்கள் அவற்றை கூரையில் பொருத்தியும் உதவி புரிந்தார். வர்ண வேலைகளை திரு.உ.பேரின்பமூர்த்தி அவர்கள் அழகுறச் செய்ததோடு, வடக்குப் புற உட்சுவரில் வினாயகர் திரு உருவங்களை தனது செலவில் வரைந்து வளம் சேர்த்தார். திருவாளர் வே.பொன்னம்பலம் அவர்கள் கருங்கற்கள், மட்டச்சீற்கள், பெயின் வகைகளை அன்பளிப்பாக வழங்கி இத்திருப்பணியில் பெரும் பங்கேற்றார்.

எம் பெருமானின் பூரண ஆசியோடும், கற்பகனின் மீளா அடியவர்களின் பல வகையான உதவிகளோடும் *03.07.2011*இல் மகாகும்பாபிஷேகப்பெருவிழா, கும்பாபிஷேகப் பிரதமகுரு சிவஸ்ரீ. ச.மு.பாஸ்கரக்குருக்கள் அவர்களால் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித்த கணேசப் பெருமானைப் போற்றி வணங்குகின்றோம். சைவ ஆகம முறைப்படி கிரியைகளை பக்திசிரத்தையுடன் இப்பெருவிழாவை மேன்மையுறச் செய்த பிரதமகுரு, ஏனைய அந்தண சிவாச்சாரியார்கள், எமது ஆலய குரு அவர்களையும் வணங்கி மகிழ்கின்றோம். திரு.செ.சக்திவேல் அவர்கள் கும்பாபிஷேகத்திற்கு தேவையான அஸ்டபந்தங்களை வழங்கியதோடு, ஆசாரியராகயிருந்து அவற்றை சிறப்பான முறையில் சாத்தியதோடு, யாகசாலைகள், குண்டங்கள் அமைப்பதிலும் பெரும்பணி செய்தார்.

கும்பாபிஷேகப் பெருவிழா எம்வாழ்வில் கிடைத்தற்கரிய பெரும்பேறாகும். இப்பெருவிழாவில் பங்கேற்ற அனைவருக்கும் கற்பகன் திருவருள் பூரணமாகக் கிடைக்க எம்பிரானைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

இறைபணியில்
தேவஸ்தான முதல்வர்
புண்ணியமூர்த்தி- ஸ்ரீ காந்தன் (J.P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பக நாயகனின் கழலடி தொழுவோர்க்கு அற்புதம் நிகழ்வதுண்டு

வடவட்டு பிரனாட்சி தோட்டத்தைப் பணிவோற்கு
நற்பலன் நிறையவுண்டு
அங்கு கற்பக நாயகனின் கழலடி தொழுவோற்கு
அற்புதம் நிகழ்வதுண்டு!

(ஐயன் வடவட்டு பிரமனாச்சி தோட்டப் பணிவோற்கு நற்பலன்
நிறையவுண்டு)

முக்கனித் தேன் சிந்தும் வட்டூரின் வடக்கிலோர்
விநாயகன் கோயில் உண்டு
அங்கு அற்புத ஈஸ்வரனை அனுதினம் தொழுவோற்கு
திக்கெட்டும் புகழுண்டு!

(ஐயன் வடவட்டு பிரனாச்சி தோட்டத்தைப் பணிவோற்கு
நற்பலன் நிறையவுண்டு)

முத்தமிழ் விளைந்தோடும் வட்டூரின் வடக்கிலோர்
உத்தமன் கோயில் உண்டு
அங்கு மத்தள வயிறனை மன்றாடித் தொழுவோற்கு
நித்திய சித்தியுண்டு

(ஐயன் வடவட்டு பிரனாச்சி தோட்டத்தைப் பணிவோற்கு
நற்பலன் நிறையவுண்டு)

கலைபொங்கிக் கரையேறும் வட்டூரின் வடக்கிலோர்
நிலையான கோயில் உண்டு
அங்கு மலைமகள் புதல்வனை மனதாரத் தொழுவோற்கு
குலையாத ஞானம் உண்டு!

(ஐயன் வடவட்டு பிரனாச்சி தோட்டத்தைப் பணிவோற்கு
நற்பலன் நிறையவுண்டு)

மங்காத புகழ்கொண்ட வட்டூரின் வடக்கிலோர்
ஐங்கரன் கோயில் உண்டு
அங்கு கற்பகப் பிள்ளையாரை கண்டடிதொழுவோற்கு
சிங்காரச் செல்வமுண்டு!

வடவட்டு பிரமனாச்சி தோட்டத்தைப் பணிவோற்கு
நற்பலன் நிறையவுண்டு
அங்கு கற்பக நாயகனின் கழலடி தொழுவோற்கு
அற்புதம் நிகழ்வதுண்டு.

(ஆசுகவி.செ.சிவசுப்பிரமணியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் பல அருளும் கற்பக விநாயகனின் பொற்பதம் பணிவோம் வாரீர்!

அற்புதம் பல அருளும் கற்பக நாயகனின்
பொற்பதம் பணிவோம் வாரீர்- வட்டு
வடக்குறு பிரமனாச்சி தோட்டத்தில் கோயில் கொண்ட
கொற்றனைப் பணிவோம் வாரீர்!

(அற்புதம் பல அருளும்)

பூமியைக் குளிரவைத்து புல்லினை முளைக்கவைத்த
சாமியைப் பணிவோம் வாரீர்- வட்டு
வடக்குறு பிரமனாச்சி தோட்டத்தில் கோயில்கொண்ட
ஓமனைப் பணிவோம் வாரீர்

(அற்புதம் பல அருளும்)

எடுத்ததைத் தொடுத்துநின்று இனிதுற முடிக்குமெங்கள்
மிடுக்கனைப் பணிவோம் வாரீர்- வட்டு
வடக்குறு பிரமனாச்சி தோட்டத்தில் கோயில் கொண்ட
கடுக்கனைப் பணிவோம் வாரீர்!

(அற்புதம் பல அருளும்)

படைத்தெமைக் காத்தழித்து மறைத்துமே அருளுகின்ற
படைப்பனைப் பணிவோம் வாரீர்- வட்டு
வடக்குறு பிரனாச்சி தோட்டத்தில் கோயில் கொண்ட
இடத்தனைப் பணிவோம் வாரீர்!

(அற்புதம் பல அருளும்)

புத்தியும் சித்தியுடன் புதுமைகள் புரிந்துநிற்கும்
ஆத்தி யடியோனைப் பணிவோம் வாரீர்- வட்டு
வடக்குறு பிரமனாச்சி தோட்டத்தில் கோயில் கொண்ட
மூத்தனைப் பணிவோம் வாரீர்!

(அற்புதம் பல அருளும்)

அற்புதம் பல அருளும் கற்பகநாயகனின்
பொற்பதம் பணிவோம் வாரீர்- வட்:டு
வடக்குறு பிரமனாச்சி தோட்டத்தில் கோயில் கொண்ட
கொற்றனைப் பணிவோம் வாரீர்!

(ஆசுகவி- செ.சிவசுப்பிரமணியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பகா தீர்த்தமாட
## "கணேசகுண்டம்" கண்டீர் வாழி

ஆதியில் வந்தமர்ந்தீர்
அழகுறு கோவில் கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி!

வீதியும் விரிவாய்க் கொண்டீர்
விளங்கிடும் நெறியும் கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி!

சோதியாய் வந்தமர்ந்தீர்
சொக்கிடும் விமானம் கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி!

வேதியர் வாழ்த்த நின்றீர்
வேள்விள் பலவும் கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி!

மேதினி போற்ற நின்றீர்
கொடிமரம் தானும் கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி!

தீதினை அழிக்க வந்தீர்
சித்திரத் தேரையும் தேடிக்கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி!

நீதிகள் நிலைக்க வந்தீர்
நிகரிலாத் தீர்த்தம் கண்டீர்
கற்பகா நீருமாட கணேசகுண்டம்
கொண்டீர் வாழி

(ஆசுகவி- செ.சிவசுப்பிரமணியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு - வடக்கு பிரமனாச்சி தோட்டம் கற்பகப் பிள்ளையார் தலம் தீர்த்தம் சிறப்பு

நீராடுவீர் ஐயா நீராடுவீர் எங்கள்
வட வட்டு கற்பகனே நீராடுவீர்
பிரமனாச்சி தோட்டமதில் நீராடுவீர் எங்கள்
கற்பகக் கணேச குண்டம் தீர்த்தமதில் நீராடுவீர்
(நீராடுவீர் ஐயா நீராடுவீர்)

நீராடுவீர் ஐயா நீராடுவீர் எங்கள்
கற்பக நாயகனே நீராடுவீர்
வெவ்வினைகள் களைந்தெறிந்தே நீராடுவீர் எங்கள்
கற்பகக் கணேசகுண்டம் தீர்த்தமதில் நீராடுவீர்
(நீராடுவீர் ஐயா நீராடுவீர்)

நீராடுவீர் ஐயா நீராடுவீர் எங்கள்
விக்கினங்கள் தீர்ப்பவனே நீராடுவீர்
வேட்கைதனைக் களைந்தெறிந்தே நீராடுவீர் எங்கள்
கற்பகக் கணேசகுண்டம் தீர்த்தமதில் நீராடுவீர்
நீராடுவீர் ஐயா நீராடுவீர்)

நீராடுவீர் ஐயா நீராடுவீர் எங்கள்
விண்ணாண்டு மண்ணாண்டு நீராடுவீர்
துன்பங்கள் களைந்தெறிந்தே நீராடுவீர் எங்கள்
கற்பகக் கணேச குண்டம் தீர்த்தமதில் நீராடுவீர்
(நீராடுவீர் ஐயா நீராடுவீர்)

நீராடுவீர் ஐயா நீராடுவீர் எங்கள்
உலகளந்த உத்தமனே நீராடுவீர்
பழவினைகள் களைந்தெறிந்தே நீராடுவீர் எங்கள்
கற்பகக் கணேச குண்டம் தீர்த்தமதில் நீராடுவீர்!
(நீராடுவீர் ஐயா நீராடுவீர்)

நீராடுவீர் ஐயா நீராடுவீர் எங்கள்
ஊர்காத்து நிற்பவனே நீராடுவீர்
அசுரமெலாம் களைந்தெறிந்தே நீராடுவீர் எங்கள்
கற்பகக் கணேச குண்டம் தீர்த்தமதில் நீராடுவீர்
நீராடுவீர் ஐயா நீராடுவீர்

ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள்

சிவஸ்ரீ. சு. சுந்தரராஜக்குருக்கள், வடக்கம்பரை

உலகிலுள்ள எல்லாப் பொருள்களுமே அவன், அவள், அது என்ற பாகுபாட்டில் அடங்கும். இவை தோன்றி அழிவதைக் காணும் போது இவை தானே இயங்காததால் இவற்றைத் தோற்றி இயக்கும் ஒரு பரம் பொருள் இருக்கவேண்டும் என்பது இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை.

"ஒருவனோடொருத்தி ஒன்று என்றுரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்றுபோவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்.

கடவுள் என்ற சொல்லுக்கே எல்லாத் தத்துவங்களையும் கடந்த பரம்பொருள், எல்லாப் பொருள்களையும் தோற்றுவித்து அவற்றின் உள்ளே உயிருக்குயிராய் நின்று இயக்குபவர் (கடவுபவர்) என்பது பொருள்.

நம் சமயாசார்யார்களான நாயன்மார்களும், ஆழ்வார்களும் நமக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளார். திருக்கோயில்கள் இறைவழிபாட்டிற்கு இன்றியமையாத சாதனங்கள் என அறிவு நித்திய தோடல்லாமல் தாங்களே பல தலங்களுக்கும் சென்று மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றைத் தெய்வமணம் கமழும் பாடல்களால் போற்றிப் புகழ்ந்தனர்.

திருக்கோயில்கள் உருவவழிபாடு, இவை அவசிமில்லாதவை என்று சொல்பவர் கூட இறைவழிபாட்டிற்கெனத் தனி இடங்களை அமைத்துள்ளனர். இந்நிலையில் கோயில்கள் ஏன் என்ற கேள்வி இயல்பே இந்த மனம் என்பது ஒரு நிலையில் நிற்பதில்லை. "ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப கோடியுமல்ல பல" என்பது குறள் அதனாலே தான்.

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஓர்
நற்றின்பால் உய்ப்பதறிவு

என்றார் வள்ளுவர். மனத்தின் இயல்பு திரிதல் அதைத்தீய வழிகளில் செல்லாது தடுத்து நல்ல வழிகளில் செலுத்துவதே அறிவு. கடவுள் இருக்கிறார் என்ற உணர்வு இல்லாமையால் பல கெட்ட காரியங்கள் செய்யப்படுகின்றன.

உடலில் உயிர் தங்க உணவு கொள்வதும் நீர் பருகுவதும் மல ஜலங்கள் கழிப்பதும் அவசியமாக இருக்கின்றன. அதுபோல உயிர் கடைத்தேற கடவுள் வழிபாடு அவசியம். உலகத்தை ஒரு சக்தி படைத்து காத்து அழித்து வருகிறது. அது நமக்கு அனுபவ பூர்வமாக தெரிந்த விஷயமே பத்துமாதங்கள் தாயின் வயிற்றில் ஒருவித ஆபத்துமில்லாமல் குழந்தை இருக்கிறது. பிறகு பூமியில் பிறக்கிறது, வளர்கிறது. ஒருநாள் இறக்கிறது. இதையெல்லாம் செய்யும் சக்தியே கடவுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலக இன்பத்துக்குப் பொருட் செல்வம் எவ்வளவு அவசியமோ அதேபோல இவ்வுடலை விட்டுச் செல்லும் உயிருக்கு நிலைத்த பேரின்பமட எய்துவதற்கு இறைவழிபாடும் அன்போடு இயைந்த அருள்வாழ்க்கையும் அவசியம். இது மக்கள் வாழ்க்கையில் வேரூன்றி இருப்பது நமது சமயத்தின் சிறப்பை நன்கு விளக்குகிறது.

நமது சமயத்தை பாதுகாக்க உதவிய நிலயங்களும் திருக்கோயில்களே முக்கிய இடம் பெறுகின்றன. பண்டய காலத்தில் அரசர்கள் ஆலயங்களைக் கட்டினபோது மக்களும் பூரண அன்புடனும் ஆர்வத்துடனும் ஒத்துழைத்தனர். எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் நம் உள்ளத்து உள்ளேயும் இருக்கிறார் என்று உணர்வது சாதாரண மனிதர்களாகிய நமக்கெல்லாம் எளிதாகப் படுவதல்ல

"தேடிக்கண்டு கொண்டேன்... தேவனை
என்னுள்ளே தேடிக்கண்டுக் கொண்டேன்"

என்றார் திருநாவுக்கரசர், அந்த உயரிய பக்தி நிலை நமக்கு எளிதில் கிட்டாது. ஆகவே இறைவனை ஒரு இடத்தில் இருப்பதாக உருவகப்படுத்தி அந்த இடத்தில் ஆன்மாலயித்து நிற்கும்படி செய்யவே ஆலயங்கள் ஏற்பட்டுள்ளன. ஆன்மா லயிக்கச் செய்யும் இடமாதலால் ஆலயம் எனப்பட்டது.

ஆலயங்கள் தோறும் சென்று வழிபடுவோர் உள்ளத்தை ஆண்டவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருளுகின்றான். ஆகவே மனிதனை புனிதனாகச் செய்வது ஆலயமாகும்.

## இறைவனிடம் பிரார்த்தனை

இறைவா, நான் யாரிடமும் கோபப்படக்கூடாது, யாருடைய செல்வச் செழிப்பையும் கண்டும் பொறாமைப்படாமல் இருக்க அருள்வாய். என் வாழ்நாள் முழுவதும் என் எண்ணங்கள் எல்லாம் உயர்ந்தவையாகவே இருக்கட்டும். நாம் எல்லா உயிர்களோடும் நேயத்தோடுவாழ அருள் செய்வாயாக துன்புறுவோரிடம் என் இதயத்தில் இரக்கம் கசிந்து உருகச் செய்வாயாக. தீயோர் இடத்தில் பொறுமையோடு இருக்கவும், அவர்களின் குறைகளை ஒதுக்கி அவர்களுடன் உள்ள நற்பணுபுகளைப் போற்றவும் எனக்கு அருள்வாயாக. இன்பம் வரும் போது மிதமிஞ்சிய களிப்பும், துன்பம் வரும் போது அளவற்ற சோகமும் என்னை நிலைதடுமாறச் செய்யாமல் காத்து அருள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வழிபாடு

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

கருணாநிதியாகிய கடவுள், புறத்திலே திருக்கோயிலுள் இருக்கும் இலிங்கம் முதலாகிய திருமேனியும் தனது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்திலே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், இங்குள்ளவர் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களின் மாத்திரம் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றைய இடங்கள் எல்லாவற்றினும் பாலில் நெய்போல விளங்காது நிற்பர்.

கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன. அவரை மனசினாலே தியானித்தலும், வாக்கினாலே துதித்தலும், கைகளினாலே பூசித்தலும், கால்களினாலே வலம்வருதலும், தலையினாலே வணங்குதலும், செவிகளினாலே அவருடைய புகழைக்கேட்டலும், கண்களினாலே அவருடைய திருமேனியை தரிசித்தலுமாம்.

அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்பு போலும் அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சி, கடவுளிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்களாவன. அவருடைய உண்மையை நினைக்குந்தோறும், கேட்குந்தோறும், காணுந்தோறும் தன்வசமழிதலும், மயிர்க்கால்தோறுந் திவலை உண்டாகப் புளகங் கொள்ளலும், ஆனந்தவருவி பொழிதலும், விம்மலும், நாதழுதழுத்தலும், உரைதடு மாறலும், அவரால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படு பவைகளைச் செய்யாதொழிதலும், அவருடைய மெய்யடியார்களை காணும் பொழுது கூசாது வணங்குதலும், பிறவுமாம்.

கடவுளால் விரும்பப்படுபவைகளாவன இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய், தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம்.

கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன கொலை, புலாலுணல், களவு, கள்ளுணல், வியபிசாரம், பொய், செய்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களாகிய நாம் பிறர்வயம் உடையவர்களும், சிற்றறிவு சிறு தொழிலுடையவர்களுமாய் இருத்தலினாலே நன்மை தீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மைகளைச் செய்யவும் வல்லோமல்லோம். ஆதலால் தம்வயமுடையவரும் முற்றறிவு முற்றுத்தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவோமானால். நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு ஒழுகுவோமானால், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் நமக்கு அருள் செய்வார்.

## வாழ்க்கை

வாழ்க்கையில் பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்ற சங்கிலியால் கட்டுண்டவர்கள் பத்த ஜீவன்கள் அவற்றால் கிடைக்கும் இன்பமே வாழ்க்கை என்று நினைப்பவர்கள். அந்த இன்பத்திலேயே அழிவும் இருக்கிறது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

சுவாமி– ராமகிருஷ்ணர்

நிலையற்ற புலனின்பங்களில் வீணாகச் செலுத்தும் அன்பை இறைவனிடம் செலுத்தங்கள் மனித வாழ்வின் மேன்மையைப் பெறலாம்.

சுவாமி– விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பெருமையும் வழிபாடும்

பேராசிரியர் வ.ஆறுமுகம்
வாழ்நாள் கல்வியற் பேராசிரியர்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

யானை முகத்தண்ணலாம் பிள்ளையார் மக்களிடையே முதலும் முடிவுமாய் தத்துவம் பெற்றவர் பக்தர்கள் அனைவரையும் பேரருட் பார்வையால் கடாட்சித்து, எந்தவித விக்கினங்களும் வராமல், காத்திடும் பரம்பொருள். அதனாற்றான் "விக்னவிநாயகன்" "விக்னேஸ்வரன்" எனும் பெயர்களையும் பெற்றான்.

ஓம் என்னும் பிரணவத்தின் உருவமாய் வடிவமைக்கப்பட்ட பிள்ளையார் அம்மந்திரத்தின் பொருளுமாவார். பிரணவம் என்பது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது. அதே போன்று பிள்ளையாரும் சகல தத்துவங்களையும் அடக்கியுள்ளார். இப்பெருமை பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்ற கூற்றினுள் இருப்பதை உணரலாம்.

நாம் எக்காரியத்தையும் ஆரம்பிக்கும் போது அதில் வெற்றியை வேண்டி முதற் கண் பிள்ளையாருக்கே வணக்கஞ் செலுத்துகிறோம். இது நம்மிடையே பாரம்பரியமாக ஊறிவிட்ட நம்பிக்கை. அந்த நம்பிக்ரக நமது உள்ளத்துக்கு வலுவை ஊட்டி மேற்கொள்ளும் காரியத்தில் முழுமையாக ஈடுபட வைக்கின்றது. விநாயகனின் பாதார விந்தங்களில் நாம் சரணடையும் தருணம் எம்மையும் எம்மைச் சார்ந்த எல்லாவற்றையும் அவனடியில் ஒப்பிவிக்கின்றோம். அந்த நம்பிக்கை எது வரினும் எம்மைக் காத்து கடாட்சிப்பான் என்ற அந்த நம்பிக்கை எம்மை, எந்த இன்னல்களுக்கும் எதிர்த்து வாகைசூட வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதகாலத்திலிருந்து விநாயகர் வழிபாடு இந்தியாவின் பல பாகங்களிலும் பரவியிருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள. வேதங்கள், தேவாரங்கள் முதலியவற்றில் இடம் பெறும் குறிப்புக்கள் அவ்வழிபாட்டு முறை பரவியிருந்தமையை உறுதி செய்வனவாய் அமைந்துள்ளன. இந்தியாவிலிருந்து கடல் கடந்த இந்துமதச் செல்வாக்குகளுடன் விநாயகர் பெருமையும் தென்காசியா, தென்கிழக்காசியா நாடுகளில் புகுந்தது. இலங்கையில் அனுராதபுர காலம் என அழைக்கப்படும் வரலாற்றின் ஆரம்பகாலத்தில் காணப்பட்ட இந்த மதச் செல்வாக்குகளில் இதுவும் கலந்திருந்தது என்பதற்கு "மிகுந்தலை சைத்தியத்தின் "வாகல்கட" எனும் வாசற்புறத்தூணில் பொறிக்கப்பட்டுள்ள பிள்ளையார் சிற்பம் சான்றுபகரும். அடுத்தடுத்த காலங்களில், குறிப்பாக வட பகுதியில் எழுச்சி பெற்ற தமிழ் இராச்சியத்தின் ஆதரவில் பெருகிய சைவ வழிபாட்டு மரபில் பிள்ளையாருக்கு முக்கிய இடம் நிலைபெற்றது. ஆற்றோரங்கள், குளக்கரைகள், புனிதமான மரங்களினடி, சந்திகள் இவையாவும் விநாயக வழிபாட்டின் சாதாரண மையங்களாகும்.

பிள்ளையார் பிரமச்சாரியாகவே காட்டப்படும் வழக்கே பொதுவானது. ஆனால் வட இந்தியாவில் அவரைத் தேவியரோடு வழிபடும் வழக்கமும் உண்டு. சித்தி, புத்தி என்ற இரு சக்திகளோடு இணைந்தவராகவும் பிள்ளையார் போற்றப்படுகின்றார். இதன் பொருள் அவர் அறிவு, வெற்றி இரண்டுக்கும் தலைவர் என்பதாகும்.

விநாயகர் வழிபாட்டில் விசேட வழிபாட்டுக்குரிய தினங்களாக சுக்கிர வாரம், ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி, மாதந்தோறும் வரும் விநாயகர் சதுர்த்தி என்பன கொள்ளப்படுகின்றன. இத்தினங்களில் ஆலயந்தோறும் விசேட அபிசேகம், ஆராதனை, திருவுலா என்பன இடம்பெறும் ஷஷ்டித் திருநாள் விநாயகரையும், முருகனையும் தியானஞ் செய்யும் நாளாகும். ஐப்பசி மாதத்தில் வருவது கந்த ஷஷ்டி, திருக்கார்த்திகையைத் தொடர்ந்து இருபத்தொரு நாட்கள் கழிந்து வரும் ஷஷ்டியும் சதய நட்சத்திரமும் கூடிய தினம்வரை விநாயகரை வழிபடும் விரதம் "விநாயகர் ஷஷ்டி விரதம்" எனப்பெயர் பெறும். இக்காலத்தில் விசேட அபிஷேக ஆராதனையுடன், விநாயகர் அவதரித்த பெருங்கதைப் புராணம் படிக்கப்படும் மரபு உண்டு. இருபத்தொராவது நாள் கஜமுகாசுர சம்ஹாரத்துடன் விரதம் முடிவுபெறும். மறுநாள் இரவு குருட்டுப் பாம்பான விஷ்ணுவின் சாப விமோசன கிரியைகள் நடைபெறும். குருட்டுத்தனம், செவிட்டுத்தனம், மலட்டுத்தனம் என்பவற்றிலிருந்து விமோசனம் வேண்டி இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது. வேழமுகம், விநாயகர் அஷ்டகம், விநாயக கவசம், விநாயகர் அகவல், விநாயகர் அனுபூதி என்பன விநாயக வழிபாட்டுக்குரிய சிறந்த தோத்திரங்கள் எனப்போற்றப்படும்.

விக்கின விநாயகனை வேண்டிப் போற்றும் பாரம்பரியம் யாழ்ப்பாண மக்களிடையே நீண்ட வரலாறு கொண்டது. அதற்கு மெருகூட்டும் விதத்தில் பல தலங்கள் முன்னணியில் திகழ்கின்றன. அவ் அணியில் பிரமனாச்சிதோட்டக் கற்பகப் பிள்ளையார் திருத்தலமும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகம நெறியில் கும்பாபிஷேகக் கிரியைகள்

பேராசிரியர்.ப.கோபாலகிருஷ்ண ஐயர்

வேதங்களும் ஆகமங்களும் கிரியை மரபு பற்றி அறியப் பெரிதும் துணை புரிவன. சமய தத்துவ சிந்தனை வளர்ச்சிக்குப் பெருமளவில் முன்னோடியாக விளங்குபவை. வேதங்கள், ஆகமங்கள், இவை சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று அம்சங்களையும் இணைக்கும் சாதனங்களாக விளங்குகின்றன. சைவ வழிபாட்டு மரபின் வளர்ச்சிக்கு இவற்றின் பங்களிப்பு அளப்பரியது. வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் இவ்விரு முதல் நூல்களும் உதவியுள்ளன. திருக்கோயிற் கிரியை மரபில் இவ்விரு நூல்கள் தரும சமயக்கிரியை அம்சங்கள் சங்கமமாகின்றன. "வேதமொடாகமம் மெய்யாமிறைவன் நூல்" என்ற திருமூலரின் கோட்பாட்டின்படி இவை சைவ பாரம்பரியத்திற்கு முதல் நூல்களாக விளங்குவதோடு கிரியை மரபுகளுக்கும் அடிப்படையாக உள்ளன.

சைவ சமயத்திற்கு இவ்விரு நூல்களினது முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் சமயப் பெரியார்கள் வைதிக சைவம் என அழைப்பதும் இங்குசிந்திக்கற்பாலது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடும் கருத்து இங்கு பொருத்தமாகும்.

"நமது சமயம் வைதிக சமயம், வைதிகம் வேத
சம்பந்தம், சைவம் சிவ சம்பந்தம், வைதிகம்
அறிவுநெறி, வேத நெறி எனவும் படும். சைவம்
சிவநெறி, அருள்நெறி எனவும்படும். அறிவு
நெறியாகிய வைதிகம சைவத்திற்கு சென்று
முற்றவேண்டும். அங்ஙனம் சென்று முற்றாத வழி
அவைதிகமாம். சைவம் வேத நெறியாகிய
வைதிகத்தின் வழி வருவது. அங்ஙனம்
வாராதேல் அது அசைவமாம். வைதிகம் உடல்.
சைவம் உயில், உயிரைப் பிரிந்த வழி உடல்
என்னாம்? உடம்பாலாய பயனைப் பெறாது உயிர்
பிரிந்துவ ழி அவ்வுயிர் என்னாம்?

இக்கூற்றிலிருந்து வைதிக நெறியின் மூலமாகிய வேதங்களினதும் சைவ நெறியின் மூலமாகிய சிவாகமங்களினதும் முக்கியத்துவம் உணரற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நடைமுறையிலுள்ள திருக்கோயிற் கிரியைகளில் வேத மரபு, சைவ மரபு சார்ந்த சில கிரியைகள் இடம்பெறுவதை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வேதங்கள் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கைச் சக்திகளைத் தெய்விக நிலைப்படுத்தி வழிபடுதலாகும். யாகத்திலே உரிய தெங்வங்களைக் கூவி அழைத்து அத் தெய்வங்களுக்குரிய அவிர்ப்பாகங்களை அக்கினி மூலம் வழங்குவதே இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். அக்கினி தெய்வத்தையும் வழிபடுவோனையும் இணைக்கும் நிலையில் சிறப்புற்றான் எனவே, இத்தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு வேத காலத்தில் சிறப்படைந்தது. அக்கினியைத் தெய்வமாக வழிபடப்படும் பாடலில் இடம்பெறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

"தீ வேள்வியின் முன்னிற்பவன். அவன் பருவங்களை
வகுக்கும் தேவன், அங்கு வானவரை
அழைப்பவன், அவனை வேண்டுகின்றேன். தீயே
நெறியிலோங்கும் வேள்வியதனை நீ எப்புறத்தும்
சூழ்ந்து காக்கிறாய். அஃதே வானவரிடம் சேரும்.
தீ, வானவரை அழைப்போன், புலமையுள்ள
செய்கைத் திறமையோன்."

இக்குறிப்பு அக்கினி வழிபடப்படும் தெய்வத்தை அழைப்பவனாகச் சித்தரிக்கின்றது. அக்கினி தேவர்களில் முற்பட்டவனாகவும் முன்னோனாகவும் விளங்குபவன். அனைத்துச் செய்கைத்திறமை, உயிர், வலிமை, பொலிவு, ஒளி, மாட்சி ஆகிய அனைத்தும் அக்கினி தேவனுடைய விளக்கங்களாகத் திகழ்கின்றன.

வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் தெய்வங்கள் வகுக்கப்பட்டன. விண்ணைச் சார்ந்தவையெனவும் இடைவெளியைச் சார்ந்தவையெனவும் மண்ணைச் சார்ந்தவையெனவும் வகுத்து வழிபடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. "பஞ்ச பூதங்கள் தெய்வங்களாக வழிபடப்பட்டன. விண்ணில் அதிதெய்வமான தியௌ, சூரியன் போன்றவையும் மண்ணுடன் தொடர்புடைய அக்கினி, சோமன், பிருதுவி போன்றவையும் ஆகாயத்துக்கும், பூமிக்கும் இடைப்பட்ட தெய்வங்களில் வாயு, பர்ஜன்யன், நீர்த்தெய்வமாகி அப்பு ஆகியவையும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இந்திரன், விஷ்ணு, உருத்தின், வருணன், பிருகஸ்பதி போன்ற தெய்வங்களிலும் மேற்குறித்த தெய்வீகப் பண்புகள் எற்றிக் கூறப்பட்டன. இவை யாவற்றுக்கும் மேலாகப் பரம்பொருளை ஒளிவடிவில் போற்றப்பட்ட சிறப்பும் வேதத்தில் காணப்படுகின்றது. அன்னத்து வழியைக் காட்டவும் பேரொளி நிலைபேறு கொண்டுள்ள சிறப்பை இருக்குவேதம் கூறும். (இருக்குவேதம் 6,9.5) சாமவேதம் "ஒளியே தெய்வம், தெய்வமே ஒளி" எனப்போற்றும், இவ்வைதிகப் பண்பு ஆகமம் வகுத்துக்கூறும் வழிபாட்டு மரபிலும் சுவறியுள்ளதை நாம் அவதானிக்கலாம். ஆகமம் வகுத்துக்கூறும் நைமித்திகக் கிரியைகளில் "உயரிடம் பெறும் கும்பாபிஷேகக் கிரியையில்நாம் இச்சிறப்பம்சங்களை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குவதன் மூலம் கும்பாபிஷேகத்தின் உட்பொருளை நாம் உணரலாம். "பிர என்னும் பகுதி, "சிறப்பாக" என்றும் நன்கு புலனாகும் படி" என்றும் பொருள்படும். "திஷ்ட" என்னும் பகுதிக்கு "நிற்றல்" என்ற பொருளும் உண்டு. எனவே, பிரதிஷ்டை எனும் பொழுது ஏனைய இடங்களில் புலனாவதைக் காட்டிலும் "சிறப்பாக நிலை நிற்றல்" என்றும் "ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல்" என்றும் பொருள்படுகின்றது. இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். பாரெங்கனும் பரந்து விளங்கும் பரம்பொருளைப் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றவிப்பது போன்று திருக்கோயிற் கிரியை வழிகளால் ஆகமம் எமக்கு உணரவைக்கின்றமை குறிப்பிடற்பாலது.

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிஷேக கிரியையின் போது குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இறைவனின் திருஉருவத்துக்கு நிகழ்த்தப்படும் நீராடுதலே சிறம்பம்சமாகும். இக்கும்பாபிஷேகக் கிரியை, இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒழிவழிப்படுத்தி எழுந்தருளி நிலைநிற்கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது. பரம்பொருளை நாம் படிப்படியாக உணரமுடிகின்றது. இறைவன் சிறு அளவில் புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் புலன்களால் செவ்விதாகக் கிரகிக்கப்பட முடியாதது. ஆகாயத்தைவிட வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் கட்புலனாகாத தொன்றாகும். இதற்கு அடுத்தநிலை அக்கினியாகும். இது கட்புலனுக்கு உட்பட்டது. எமது வழிபாட்டு முறைகளில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்றவல்லது. அக்கினியைப் பேணிப் பாதுகாப்பதும், தொடர்ந்து வழிபடுவதும் எளிதான காரியமல்ல. இந்நிலையிலிருந்து சற்று எளிமையாக விளங்குவது நீர் எனினும், கிரகிக்கத்தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுவது எளிதன்று. இதுவரை கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவதாகிய மண், இதனிடத்து இறைவன் தெய்வீக அம்சங்களை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் ஓரளவு எளிதில் கைகூடும் நிலையாகும். இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் பரந்து விரிந்து விளங்கும் தன்மையைத் தைத்திரீய உபநிடதம்.

ப்ரஹ்மண ஆகாச: ஸம்பூத:
ஆகாசாத் வாயு:
வாயோரக்நி:
அக்நேராப:
அத்ப்ய: ப்ருதிவீ:

எனக்கூறும் இம்மரபினை ஆகமங் கூறும் கிரியை மரபில் நாம் அவதானிக்கலாம். இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியையின் உயர்நிலையைக் குறிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாய வெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது. இங்கு அமைக்கப்படும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலையின் மையத்தில் விளங்கும் வேதியில் அமையும் குடும்பத்தில் இருப்பது நீர். இவ்வாறு பஞ்சபூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பிருதிவியோடு தொடர்புடைய திருவுருவத்தில் நிறைவெய்துகிறது. அத்திருவுருவும் நிறைவேறியதும் நீரால் அபிஷேகிக்கப்பட்டவுடன் இறை அம்சத்துடன் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்கும் உபசாரத்திற்கும் உரியதாக விளங்குகின்றது. பிரதிட்டையின் பின் பிம்பம் என்ற பெயர் நீங்கி இறைவனது திரு நாமத்தைக் கொண்டு விளங்கும் நிலை ஏற்படுகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அட்டமூர்த்தி எனச் சிறப்பிக்கப்படுகின்றான். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும் இவ்வேழு அம்சங்களின் வேறாய் நின்று இவற்றின் உணரும் எசமானதும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ்வெட்டு அம்சங்களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நோக்கமாகும். கிழக்கு முதலாய எட்டுக் குண்டங்களிலும் இந்த அட்டமூர்த்தியைப் பூசித்தலும் சிறப்பம்சமாகும். அக்கினி வழிபாடு வைதிக நெறியில் சிறப்புப் பெறுவது போல இங்கும் இறைவனை வழிபடுவதற்குச் சிறப்புப் பெறுகின்றது. ஆகம நெறியில் இது உயர் நிலை வகிக்கின்றது. நவ குண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலைகளில் பூசித்து அந்தந்தக் குண்டங்களுக்குரிய சமித்து வகைகள் விசேட ஓமங்கள், பூர்ணாகுதி முதலியன இடம்பெற்று யாகம் பூரண பொலிவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியை அநாவர்த்தனம் ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும். ஆலயம் இல்லாத ஓரிடத்திலே ஆகம விதிகளுக்கமையப் புதியதொரு ஆலயம் அமைத்து அங்கு இறைவனை எழுந்தருளச் செய்தல் அநாவர்த்தனம் எனப்பெயர்பெறும். பல காலத்திற்கு முன் அமைக்கப்பட்ட ஆலயத்தில் தொடர்ந்து நித்திய நைமித்திகங்கள் நிகழ்ந்து வரும் வேளை எதிர்பாராதவாறு தீயினால் பாதிப்புறுதல், காடு படர்தல், மண்மாரி ஆகியவற்றால் தடையேற்படுமிடத்து அதனை நிவர்த்திசெய்து நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனம் எனப்பெயர் பெறும். நித்திய நைமித்திகங்கள் முறையாக நடைபெற்றுவரும் ஆலயத்தில் விமானம், கருவறை, மண்டபம், கோபுரம், பிரகாரம் பரிவாரக்கோயில்கள், ஆலய வழிபாட்டிற்குரிய விக்கிரகங்கள் ஆகியவை பழுதடைந்தால்பாலஸ்தாபனம் செய்து, திருப்பணி மூலம் புனரமைத்து பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தனப் பிரதிஷ்டை எனப்பெயர் பெறும். திருடர் பிரவேசித்தல், எதிர்பாராத நிகழ்வுகள் போன்றவற்றினால் நித்திய பூசைகள் தடைப்படின் உடன் நிகழ்த்தப்படும் பிரதிஷ்டை அந்தரிதம் எனப்பெயர் பெறும்.

கும்பாபிஷேகம் நிகழ்வதற்கு முன்னோடியாக இடம்பெறுவது ஆலய நிர்மாணம் அல்லது புதுப்பித்தல் ஆகிய திருப்பணியாகும். இக் கைங்கரியத்தில் ஆலய அறங்காவலர்களுக்கும் ஆலயத்தில் வழிபடும் பக்தர்களுக்கும் பெரும் பங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து இடம்பெறுவது கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்கான முகூர்த்தம் மக்களுக்கும் கிராமத்திற்கும் நலத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். யாகசாலை அமைத்தல், குண்டங்களை நிர்மாணித்தல் அடுத்து இடம்பெறும் முக்கிய பணிகளாகும். ஐந்து குண்டங்கள் (பஞ்ச குண்டம்) ஒன்பது குண்டங்கள் (நவ குண்டம்), பதினேழு குண்டங்கள் (சப்ததச குண்டம்) இருபத்தைந்து குண்டங்கள் (பஞ்ச விம்ச குண்டம்) முப்பத்துமூன்று குண்டங்கள் (திரயஸ்திரிம்ச குண்டம்) என்ற எண்ணிக்கையில் வசதிக்கேற்ப குண்டங்களை யாகசாலையில் அமைக்கலாம். குண்டங்களை நிர்மாணிப்பதற்குரிய அளவுப் பிரமாணங்களும் அமைப்புக்களும் கூறப்பட்டுள்ளன. சதுரம், யோனி, அர்த்த சந்திர, திரிகோண, விருத்த ஷடஸ்ர, பத்ம, அஷ்டாஷ்ர வடிவங்களில் குண்டங்கள் அமைப்படும்.

கும்பாபிஷேகம் இடையூறின்றி நிகழ விநாயகப் பெருமானை நினைந்து நிகழ்த்துவது கணபதி ஹோமம், இதனைத் தொடர்ந்து ஆச்சாரிய வர்ணம் நிகழும், கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தலே இதன் நோக்கம். திரவிய பாகம், அனுஞ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், திசாக்ஷோமம், சாந்திக்ஷோமம், மூர்த்திஹோமம், வாஸ்துசாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், ஜலாதிவாசம், புதிய தெய்வ விக்கிரகங்களுக்காக தான்யாதிவாசம், நயனோன் மீலனம், கிராமபிரதக்ஷிணம், சயனாரோபணம், அக்கினிகார்யம், நாமகரணம், பிம்ப பிரதக்ஷிணம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணெய்க் காப்பு, பிம்பசுத்தி, ஷடத்துவநியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ரா தானம், கும்ப உத்வாசனம், ஸ்தூபிஸ்தானம், இலிங்கத்திற்கு நவதநுகல்பனம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், மகாபிஷேகம் தீபாராதனை, ஆசார்யோற்சவம், மண்டலபூசை, மண்டலபூர்த்தி ஆகியவை கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரியைகளாகக் கொள்ளப்படுகின்றன. யாகசாலையிலும் ஆலயத்திலும் நிகழும் பல்வேறு கிரியைகள், வைதிக சமய மரபினதும் ஆகமங்கூறும் சமய மரபினதும் இணைப்பை உணர்த்தி நிற்கின்றன. கும்பாபிஷேகக் கிரியை நிகழும்போது வேதமோதுதல், திருமுறை ஓதுதல், நாத உபாசனை போன்றவை முக்கிய அம்சங்களாக இடம்பெறுபவை. கும்பாபிஷேகக் கிரியையினால் திருக்கோயிலும் சூழலும் புனிதமடைவது போன்று அதில் ஈடுபடும் அனைவரது உள்ளங்களும் நிறைவு பெறுவதும் குறிப்பிடத்தக்கது. இக்கிரியை பக்தியுணர்வை ஏற்படுத்தவல்லதாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நிறைவேற்றிய பின்னர் இறைவன் ஆலயத்தில் சாந்நித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனாகின்றான். தெய்விகப் பொலிவு பெற்று விளங்கும் இறைவனுக்குப் பல்வகை உபசாரங்களும் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும் முறையாக இடம்பெறுவன. ஆகம வழிபாட்டு மரபிற்கு யசுர் வேதமும் முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. யசுர் வேதத்தில் இடம் பெறும் சதருத்திரியம் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கதாகும். இம்மரபு ஆலய வழிபாட்டில் உயர் தனியிடத்தைப் பெறுவதோடு தென்னாட்டுத் திருக்கோயில் வழிபாட்டிலும் பெரிதும் கையாளப்படுகிறது. இவ்வழிபாட்டு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களை வசீகரித்துத் தன் உள்ளத்தில் வயமாக்கும் முறையைச் சார்ந்து நிற்பதாகும். வழிபடப்படும் தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் இப்புதியதொரு முறை யசுர் வேதத்தில் தான் தன்முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. யசுர் வேதத்தில் சதருத்திரியம் என்ற பகுதியில் உருத்திரன் என்ற தெய்வம் நூறு பெயர்கள் கொண்டு வழிப்டப்படுகின்றான். இப்பெயர்களின் காரணப்பெயர்கள், சில தெய்வங்களின் பண்பைச் சுட்டுவன, இத்தகைய பெயர்கள் நூறாகவும் ஆயிரமாகவும் தொகுக்கப்பட்டுப் புராணங்களில் காணப்படுகின்றன. ஆகம மரபில் தென்னாட்டு ஆலயங்களில் நிகழும் நித்திய வழிபாட்டில் இத்தகைய பல பெயர்களைக் கொண்டு இறைவனைச் சிறப்பித்து வழிபடும் முறை அர்ச்சனை எனப்படுவதாகும். அஷ்டோத்திரம், சஹஸ்ரநாமம், லட்சார்ச்சனை, கோடியர்ச்சனை என இவை விரிவுபெறுகின்றன. இம்மரபிலும் வைதீக, ஆகமக் கிரியை மரபுகளின் சங்கமத்தைக் காண்கின்றோம். மந்திரங்களை உச்சாடனம் செய்து வழிபடும் முறைகள் இரு சமய மரபுகளிலும் சிறப்புற்று விளங்குகின்றன. தோத்திரங்களைக் கூறி வழிபடும் முறையும் பொதுவாகவுள்ளது. ஆகம வழிபாட்டு மரபில் இசையுடன் பாடல்களைப் பாடும் மரபுக்கச் சாமவேதம் முன்னோடியாக விளங்கியிருக்கலாம்.

ஆகம மரபில் இறைவனுக்கு நிகழும் உபசாரங்களிலும் பஞ்ச பூத அம்சங்கள் விரவியுள்ளன. திரவியங்கள், சந்தனம், கிழக்கு, பழம், புஷ்பம் இவைகளில் செய்யப்பெறுவன பார்த்திப உபசாரம், இவை மண்ணின் தொடர்பைக் காட்டுவன. தீர்த்தம், பால். தயிர் போன்றவை நீரின் உபசாரமாக அமைவன. நவரத்தினம், தீபம் போன்றவை ஆக்னேய உபசாரம், அக்கினியின் தொடர்பைச் சுட்டுவன. தூபம், சாமரம், வாயு உபசாரங்களாகும். மணி, கானம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம், எனவே, இறைவனுக்குச் செய்யப்படும் அனைத்து உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாக விளங்குகின்றன. தென்னாட்டில் விளங்கும் பஞ்சபூதத் தலங்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. திருவாரூர் பிருதிவித்தலமாகவும் திருவானைக்கா அப்புத்தலமாகவும் திருவண்ணாமலை தேயுத்தலமாகவும் காளத்தி வாயுத் தலமாகவும் சிதம்பரம் ஆகாயத் தலமாகவும் சிறப்பிக்கப்படுகின்றன.

கும்பாபிஷேகம் முறையாக நிறைவேறிய பின் அஷ்டபந்தனம் சாத்திய தோஷநிவாரணத்தின் பொருட்டும் கும்பாபிஷேகம் செய்த பயனை அடைவதன் பொருட்டும் அவசியம் செய்யப்படுவதே மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45 நாட்களைக் கொண்டது. சிலர் 48 நாட்களாகவும் கொள்வர். இவற்றில் உத்தமமானது 45 நாட்களைக் கொண்ட மண்டலமாகும். 48,45,24,15,12,10 என மண்டலாபிஷேகத்தை அரைவாசி கால்வாசி என்ற கணக்கிலும் செய்யலாமெனக் கூறப்பட்டுள்ளது. மண்டலாபிஷேகம் சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு நிகழ்த்தப்படும் கிரியைகளின் உயிர்நாடியாக விளங்குவது மந்திரமாகும். கிரியைகளில் ஈடுபடும் ஒருவனுக்குப் புற அடக்கமும் அக அடக்கமும் உண்டானால் தான் படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் உண்டானால் தான் படிப்படியாக உள்ளடக்கம் சித்திக்கும். இந்த அடிப்படைத் தத்துவமே ஆகமம் விதிக்கும் கிரியைகளில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் ஏற்படும் முதிர்ச்சியின் விளைவாகக் கிரியை பற்றிய அறிவும் அனுபவமும் ஏற்படும். இவ்விரண்டினால் பதிபக்குவமும் இறுதியில் சித்தசுத்தியும் உரிய வேளையில் ஏற்படும் பொழுது மறைபொருளாய் உணர்த்தப்படும். தத்துவங்கள் ஒவ்வொன்றாகத் தானே விளக்கம் பெறும். எமது உள்ளத்திலே சித்தசுத்தியே ஏற்படுத்த சமயக் கிரியைகள் பெருந்துணை நிற்பன. பக்தியுடன் நல்ல கிரியைகளில் மனம் ஈடுபாடு கொள்ளுமிடத்து உள்ளடத்தில் ஓர்நிறைவான உணர்வு மேலிடுகின்றது. இவ்வுயர் நோக்கத்திற்காகவே சமயக் கிரியைகள் எம்மிடத்தே நிலைபெற்று விளக்குகின்றன.

கிரியைகளின் இத்தகைய சிறப்பினைக் கருத்திற்கொண்டே சைவசித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம், அதனைப் பின்வருமாறு சிறப்பித்துக் கூறுகின்றது.

கிரியையென மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்

அந் நூலின் பாயிரத்தில் வரும் இக்கருத்து இங்கு குறிப்பிடத்தக்கதொன்று. இதன்படி ஆகம நூல்களில் கிரியை எனச் சொல்லப்பட்டுப் பொருந்தியிருப்பன யாவும் ஞானம் கிடைப்பதற்குக் காரணமாக அமைவனவாகும். கிரியைகளின் இத்தகைய புனிதத்தவம் கருதியே திருக்கோயில்களில் பணி செய்பவர்களும், வழிபடுவோரும் தாம் மேற்கொள்ளும் பணிகளும் வழிபாடும் பயன்பெறும் பொருட்டுத் தம் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றைத் தூய்மை செய்து தம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

திருக்கோயில்கள் ஆகம மரபு பேணப்படும் தூய்மையான இடங்களாகும். மந்திரசக்தி எங்கணும் பரவி, தெய்வீக உபாசனை நிகழும் இடமாகவும் அது விளங்குகின்றது. அங்கு இறைவனது திருவருட்சக்தி வெளிப்பட்டு நிற்கும். ஆகவேதான் கிரியைகள் நிகழும் இடமாகிய ஆலயம் தூய்மையாகவும், அமைதியாகவும் விளங்கவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது.

ஆகமக் கிரியைகள் புலன்களைச் சிவநெறியிற் செலுத்துவன. கிரியைகட்கு உயிராகிய மந்திரமும் பாவனையும் புலன்களைச் சிவமயமாக்கும். இத்தகைய ஆற்றல் வாய்ந்த கிரியைகளில் மந்திர உச்சாடனங்கள் முறையாக இடம்பெற வேண்டியவை. வைதிக மரபிலும் ஆகம மரபிலும் நிகழும் கிரியைகளுக்குரிய பொது அம்சம் இந்த மந்திர கிரியைகளுக்குரிய கிரியைகளில் மந்திரம் பெறும் முக்கியத்துவத்தினையும், அதன் சிறப்பையும் அம்மந்திரத்தை உச்சாடனஞ் செய்வதனால் ஏற்படும் பயன்களையும் சிந்திப்பது பொருத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திரமின்றேல் கிரியைகளில்லை" எனக்கூறுமளவிற்குச் சிவாகம மரபில் மந்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. மந்திரம் தெய்வீக அம்சம் பொருந்தியதோடு இறைவனையே மூலமாகக் கொண்டெழுந்ததெனப் பெரியோர் கூறுவர். மந்திரங்களை உபதேச முறையில் பெறுவதற்கும் அவற்றை உரியவாறு உச்சாடனம் செய்வதற்கும் பல்வேறு தகுதிப்பாடுகள் உண்டு. வேத மந்திரங்களைத் தமது உள்ளத்தில் உணர்ந்தவர்கள் இருஷிகள் எனப் போற்றுவர். உள்ளத்தில் தெய்வீக அனுபவத்தை ஏற்படுத்தவும் பெற்ற அந்த அனுபவத்தை பிறர் நம்மை பொருட்டு வெளிப்படுத்தவும் உள்ளத்தை இறைவன்பால் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் உயர்ந்த மன ஈடுபாட்டினால் இறைவனை உணரவும் தெய்வீக சக்தியை ஏற்படுத்தவும், மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன எனக்கூறுலாம். ஆகவேதான் மந்திரங்கள் தெய்வீக சக்திவாய்ந்தவை என நம்பப்படுகின்றன.

மந்திரங்கள் அட்சர வடிவமானவை. ஒவ்வொரு தெய்வத்திற்கும் மூல மந்திரம் உண்டு. மந்திரங்களுக்கு முக்கியமானது உச்சரிப்பு. வேத மந்திரங்களுக்கு உச்சரிப்போடு ஸ்வரமும் முக்கியமாகும். முறையான உச்சரிப்பே மந்திரங்களுக்குச் சக்தியைக் கொடுக்கக்கூடியது. ஆகவே, ஒரு மந்திரத்தை உச்சரிப்பவரின் தகுதியைப் பொறுத்தும் உச்சரிக்கவேண்டிய முறைகளினாலுமே அந்த மந்திரத்தின் சக்தியால் பலன் ஏற்படுகின்றது. இம் மந்திரங்களைத் தெய்வீக சாந்நித்தியம் மிக்க இறைவன் சந்நிதியில் நிகழும் கிரியைகளின் மூலம் புனிதத்துவமும் அமைதியும் ஏற்பட வழிபிறக்கும்.

மந்திர சப்தம் நித்தியமானது, அழிவில்லாதது. அத்தகைய மந்திர சப்தங்களே கிரியைகளுக்குரிய ஆதார சுருதியாகும். இக்காரணம் பற்றியே வேத மந்திரங்களின் உச்சாடனங்களை அறியவும் ஆகமக் கிரியைகளில் மந்திரப் பிரயோகங்களை உரியவாறு உணரவும் பயிற்சி இன்றியமையாததாக அமைகின்றது. சிவாசாரியர் என்ற ஆசாரிய தகுதிப்பாட்டினை ஒருவர் பெறுமுன்பு சற்குருவை நாடி மந்திரமரபு, உச்சாடனம் மற்றும் பிரயோக முறைகள், நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்து தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டியவராக உள்ளார். இத்தகைய பயிற்சி முறை குருகுல வாசத்தினால் மரபு வழியாகப் பெறப்பட்டு வந்தது. தந்தை மைந்தனுக்குப் பயிற்றுவிப்பதன் மூலமாகவும் இப்பயிற்சி இடம்பெற்றது. "குரு இல்லா வித்தை பாழ்" என்ற முதுமொழிக்கேற்ப ஆகமக் கிரியைகளைப் பொறுத்தவரை குருவின் வழிகாட்டல் இன்றியமையாததொன்றாகக் கருதப்பட்டு வந்தது. இத்தகைய பயிற்சி முறையினால் பெறப்பட்ட அநுபவமே ஆகமக் கிரியைகளை முறையாக இயற்றுவதற்கு உறுதுணையாக அமைந்தது.

தெய்வீக சக்தி பொருந்திய வேதாகம மந்திரங்களைத் திருக்கோயிற் கிரியைகளின் போது உச்சரிக்கும்பொழுது கல்லினாலும் உலோகத்தினாலும் உருவாக்கப்பட்ட விக்கரகங்கள் தெய்வீகப் பொலிவு பெறுகின்றன. கிரியை நிகழும் இடத்தைத் தூய்மைப்படுத்துகின்றன. கிரியைகளுடன் தொடர்புடையவர்களது அகத்தையும் புறத்தையும் தூய்மைப்படுத்துகின்றன. கிரியைகளுக்குரிய பொருட்களைத் தூய்மைப்படுத்துகின்றன. சிவசின்னங்களில் ஒன்றாகிய திருநீற்றையே சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திரமாவது நீறு" எனப் போற்றுகின்றமை இங்கு சிந்தனைக்குரியது. திருநீற்றினை மந்திரத்தின் சக்தியாகவே கொள்கின்றார். சிவாயநம என்பது சிவ மந்திரமாகும். "சிவாயநமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை" என்றழைப்பது நல்வழி. இவ் வைந்தெழுத்துக்களும் சைவ சமயத்தின் உட்கிடையினையும் விரிவினையும் விளக்கும் மூலமந்திரங்களாகும். நான்கு மறைகட்கும் மெய்ப்பொருளாகவும், நற்றுணையாகவும் நிற்கும் நமச்சிவாய மந்திரத்தைத் திருமூலர் இவ்வுலகுக்கு ஒரு கனி என்பர். சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தே திருவடிவுணர்வாகும். இம் மூலமந்திரத்தால் திருவருட்பேறு சித்திக்கும்.

"ஓம்" என்ற பிரணவ ஒலி எழுப்பி மந்திரங்கள் உச்சரிக்கப்படுவது "நம" எனக் கூறி வழிபடுவதும் மந்திரங்களில் நாம் காணும் முக்கிய அம்சங்கள், அவ்வத் தெய்வங்களுக்குரிய மூல மந்திரங்களும் தியானமும் இக்கிரியையின் போது சிறப்பாக உச்சரிக்கப்படுவன

இவ்வாறாக அமையும் மந்திரங்களின் சிறப்பினை உணர்ந்து கிரியைகளில் நாம் ஈடுபடுதல் வேண்டும். மந்திரங்கள் உயிரையும் உயிரின் உடம்பையும் செம்பொருளாக்கும் திறம் பெற்றவை. எனவே, அவற்றின் சிறப்பைச் சமயவழி நிற்கும் அனைவரும் உணர்ந்து நயத்தல் வேண்டும்.

இவ்வாறு மந்திரச் சிறப்புடன் கூடிய ஆலயக்கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபிஷேகம் என்னும் பிரதிஷ்டைக் கிரியைகளில் வேத நெறியும் ஆகம நெறியும் கூறும் சமயமரபு சங்கமமாகின்ற உயர்நிலையை அவதானிக்க முடிகின்றது. இயற்கைச் சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல், அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம், அருச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களில் இவற்றின் சிறப்பினை நாம் உணரலாம். எனவே, ஆலயக் கிரியைகள் நீண்டகாலப் பாரம்பரிய உணர்வின் நிகழ்காலச் சின்னங்களாக அமைந்து பக்தி உணர்வை வளர்ப்பதோடு ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுவனவாக உள்ளன. எமதுசமயப் பாரம்பரியத்தில் உன்னத வழிமுறைகளாகவே ஆலயக் கிரியைகள் அமைந்து விளங்குகின்றன.

## யார் புத்திசாலி?

தான் படித்த நூலறிவை எவன்
வாழ்க்கைக்கு பயன்படுத்துகின்றானோ,
அவனே புத்திசாலி

அறிஞர் பேகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விரதங்கள்

(செல்வி. கீர்த்தனா ஆறுமுகதாசன்)

மனித வாழ்வானது உயர்ந்த அரியதான ஒன்றாகும். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" இவ் மானிடப்பிறவியிலேயே இறைவனை நினைவுகூறுவன விரதங்கள் விரதமானது மனம், பொறி வழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேறும் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுவது ஆகும்." நாவலர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். இவ் வகையில் விநாயக பெருமானுக்கு உரிய விரதங்கள் நான்கு ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையும் வளர்பிறை சதுர்த்தியும் தேய்பிறை சதுர்த்தியும் விநாயக சஷ்டியுமே அவற்றில் சிறப்பாக ஆவணி மாத வளர்பிறையில் வரும் சதுர்த்தியையே மக்கள் விநாயக சதுர்த்தி எனக் கொண்டாடுகின்றனர்.

இந்த ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியே விநாயகர் அவதரித்த நாளாகும் என்பர். புற்றுமண்ணால் விநாயகப் பெருமானின் திருவுருவம் அமைத்து, அதில் விநாயகரை மந்திரம் பாவனை கிரியைகளால் எழுந்தருளச் செய்து அபிஷேக அலங்காரம் செய்து நிவேதனப் பொருட்களை வைத்துப் போற்றி வழிபடுதல் முறையாகும். நிவேதன வகையில் மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம் முதலியவை சிறந்தவையாகும். அவருக்கு உகந்த மலர்கள், தும்பை, வன்னி, எருக்கு, அறுகு, கொன்றை முதலியனவாகும். இவ்விதம் பெருமானை வழிபட்டு திருக்குளத்திலோ, புண்ணிய ஆறுகளிலோ விட்டுவிடுவார்கள்.

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை தேய்பிறைகளில் வரும் சதுர்த்தித் திதிகள் வழிபாட்டுக்கு உகந்தவை ஆவணித்திங்கள் வளர்பிறையில் வரும் சதுர்த்தி நாளிலே வளர்பிறை (சுக்லபட்ச) சதுர்த்தியை தொடங்கவேண்டும். வளர்பிறை சதுர்த்தி திதியின் அதிபதியான தேவி தன்னை அவருடைய இருப்பிடமாகச் செய்து கொள்ளுமாறு வேண்டியுள்ளார். அதற்கு அருள்புரிந்த விநாயகர் "நான் உனக்கு மத்தியானத்தில் காட்சி அளித்த படியால் என்னை வழிபடுவோர், என் அருளைப் பெறுவர். சதுர்த்தியன்று ஆகாரமில்லாது என்னை வழிபடுவோருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் வழங்குவேன் என்றார். மேலும் மாசிமாதமும் தேய்பிறைச் செவ்வாய்க்கிழமை அன்று சதுர்த்தி வருமானால் அன்று கணபதிக்கு உகந்த சங்கட ஹர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்த்தி விரதத்தை தொடங்குவார். காலை முதல் சந்திரோதயம் வரை நீர் தவிர வேறு எதுவும் உட்கொள்ளாமல் சந்திரனைப் பார்த்த பின்னர் அருக்கியம் கொடுத்து 21 அறுகம்புல் கொண்டு விநாயகரின் 21 திருப்பெயர்களை அருச்சித்து அதன்பின் உப்புகாரம் சேர்க்காத உணவை உட்கொள்ளவேண்டும். இரவு கண்விழித்து விநாயகரின் கதை கேட்க வேண்டும். இவ்வாறாக ஓராண்டு காலம் சதுர்த்தி நாட்கள் தோறும் விடாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும். ஆண்டு தோறும் விடாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும். ஆண்டு முழுவதும் 24 சதுர்த்திகளிலும் விரதம் மேற்கொண்டு ஆவணி சுக்ல சதுர்த்தியில் விரதத்தை பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவதன் வழி பெறற்கரிய பேறுகளைப் பெறலாம்.

மேலும் விநாயகப் பெருமானுக்கு உகந்த விரதமாகிய விநாயக சஷ்டியை நோக்குகையில் விநாயகசஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமாரசஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் கூறுப்பெறுகிறது. கார்த்திகை திங்கள் கிருஷ்ணபட்சப் பிரதமை முதலாக மார்கழித்திங்கள் (வளர்பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொருநாளும் இந்த விரதம் கடைப்பிடிக்கப்பெறுகிறது. சைவர்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும். இவ்விரத காலத்தில் 21 நூல் இழைகளினால் ஆகிய காப்பு கட்டிக்கொள்வர். 21 நாட்களும் ஒரு பொழுது உண்டு. இறுதிநாளில் உபவாசம் இருந்து இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலியவற்றை நிவேதித்துச் சிறப்பு வழிபாடு செய்யவேண்டும். 21 நாட்களும் பெருங்கதை என்னும் விநாயக புராணம் படிக்கவேண்டும். கேட்கவேண்டும். (இந்த 21 நாட்களிலும் விநாயக கவசத்தை நாள் ஒன்றுக்கு 21 முறை பாராயணம் செய்தால் நினைத்த காரியம் கைகூடும்)

அடுத்தநாள் ஏழை எளியவரோடு இருந்து உண்டு விரதத்தை நிறைவேற்ற வேண்டும். விநாயகப் பெருமானை சதுர்த்தி நாட்களில் வழிபடுவதால் கிடைக்கும் 21 பெரும் பேறுகள் தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோட்சம், முகத்தில் வீரலக்ஷ்மி கடாட்சம், விஜயலக்ஷ்மி கடாட்சம், எல்லோரும் தன்னிடம் அன்பாக இருக்கும் தன்மை, குடும்பத்தில் கர்ப்பரக்ஷை, மக்கட்பேறு, நுண்ணறிவு, நற்புகழ் சோகத்தினால் வாடாத தன்மை, அசுபங்களை அகற்றல், தன்வாக்கு எதிர்வாக்கு அடங்கிப்போதல், கோபங் கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் தன்மை, பிறர் ஏவும் ஆபிஎரம் (பகைவன் மரணம் அடையும் படி செய்யும் கொடுந்தொழில்) அடக்குதல், துயர்தீர்த்தல், நஜன் வினைதீர்க்கும் பேறுகளை அடையலாம்.

இவ்வாறு விநாயக பெருமானை வழிபட்டு நாமும் நற்பேறு அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பற்றிய வினாவிடை

விடை -01 இந்து சமயத்தவர் முதலில் வழிபாடு செய்யும் தெய்வம் யார்?

விடை விநாயகர் (விநாயகர் வழிபாடு செய்யாமல் எந்தவொரு காரியத்தையும் இந்துக்கள் செய்யமாட்டார்கள்)

வினா-02 விநாயகன் என்பதன் பொருள் என்ன?

விடை வி + நாயகன் விநாயகன் தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவன்

வினா-03 விநாயகப் பெருமானின் உருவ தத்துவம் என்ன?

விடை விநாயகருடைய வடிவம் ஓர் விந்தையானது யானையின் தலை, பெருவயிறு, மனித உடல், ஐந்து கரங்கள் கூடியவடிவம்.

| | | |
|---|---|---|
| இடையின் கீழ் பகுதி | - | மனித உடம்பு |
| இடைக்குமேல் கழுத்துவரை | - | தேவ உடம்பு |
| கழுத்துக்கு மேல் | - | விலங்கின் தலை |
| பெருவயிறு | - | பூதவடிவம் |
| ஒருபக்கக் கொம்பு | - | ஆண் தன்மை |
| மற்றொரு கொம்பு | - | பெண் தன்மை |

எனவே அஃறிணை உயர்திணை அம்சங்கள் பொருந்திய இந்நிலையை உற்றநோக்கில் விநாயகப்பெருமான் தேவராய், மனிதராய், பூதராய், ஆணாய், பெண்ணாய், எல்லாமாய் திகழ்கிறார் என்பது புலனாகும்.

வினா-04 விநாயகப் பெருமானின் ஐந்து கரங்களிலும் உள்ளுவை எவை?

விடை:-
1. துதிக்கையில் நீர்க்குடம்
2. மேல் வலது கையில் அங்குசம்
3. மேல் இடது கையில் பாசம்
4. கீழ் வலது கையில் ஒடிந்த தந்தம்
5. கீழ் இடது கையில் மோதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வினா:- 05 | விநாயகப் பெருமானின் 16 வடிவங்களின் பெயர்கள் எவை? | |
| விடை | 01. பாலகணபதி | 09. விக்னகணபதி |
| | 02. தருணகணபதி | 10. ஷிப்ரகணபதி |
| | 03. பக்தி கணபதி | 11. ஹேரம்பகணிபதி |
| | 04. வீரகணபதி | 12. லஷ்மீகணபதி |
| | 05. சக்திகணபதி | 13. மஹாகணபதி |
| | 06. பிரமகணபதி | 14. விஜயகணபதி |
| | 07. பிங்களகணபதி | 15. ந்ருத்தகணபதி |
| | 08. உச்சிஷ்டகணபதி | 16. ஊர்த்வகணபதி |

வினா: 06 வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர் என்று கூறுவது ஏன்?

விடை துதிக்கை வலப்புறமாக வளைந்திருப்பின் வலம்புரி விநாயகர் என்றும், இடப்புறமாக வளைந்திருப்பின் இடம்புரி விநாயகர் என்றும் அழைப்பர். வலம்புரி விநாயகரை விசேஷமாகக் கொள்வர்.

வினா 07 விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் எவை?

விடை மாதந்தோறும் வளர்பிறைச் சதுர்த்தி விரதம்
ஆடி மாதத்து செவ்வாய்க் கிழமைகள்
மார்கழி மாதத்தில் 21 நாள் விநாயக ஷஷ்டி விரதம்
விசேஷ தினம் ஆவணி வினாயக சதுர்த்தி விரதம்

விடை 08 வினாயகருக்குரிய பத்திரங்கள் எவை? (பத்திரம்-வில்வவகை)

| | | | |
|---|---|---|---|
| விடை | 01. முல்லை | 08. நாயுருவி | 15. அரளி |
| | 02. வில்வம் | 09. எருக்கலை | 16. மருதை |
| | 03. கரிசிலாங்கண்ணி | 10. விளாத்தி | 17. மாதுளை |
| | 04. ஊமத்தை | 11. விஷ்ணுகிராந்தி | 18. மரு |
| | 05. இலந்தை | 12. தேவதாரு | 19. ஜாதிமல்லி |
| | 06. வன்னி | 13. அரசு | 20. அகத்தி |
| | 07. வெள்ளெருக்கு | 14. தாழை | 21. அறுகு |

வினா 09 விநாயகருக்குரிய நிவேதனப் பொருட்கள் எவை?

விடை மோதகம், அவல், கடலை, பொரி, எள்ளுருண்டை, பயறு, தேங்காய், மாம்பழம், பால், தேன், கற்கண்டு, வள்ளிக்கிழங்கு

வினா 10 விநாயகரை வழிபடும்போது எவ்வாறு வழிபட வேண்டும்?

விடை நமது தலையிற் குட்டி, காதுகளைப் பிடித்து தோப்புக்கரணம் போட்டு வணங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வினா 11 | விநாயகர் முன் மூன்று முறையா? ஐந்து முறையா? தலையிற் குட்டி வணங்கவேண்டும். |
| விடை | கைகளை நேராகவும், விரல்களை முஷ்டியாகப் பிடித்து ஐந்துமுறை தலையிற் குட்டி வணங்கவேண்டும். |
| வினா 12 | விநாயகப் பெருமானை மூன்று முறைதானே தலையில் குட்டி வணங்குகின்றார்கள். ஐந்து முறை குட்டவேண்டும் என்பதன் விளக்கம் என்ன? |
| விடை | மூன்று முறை குட்டி வழிபடுவது ராக்ஷத குட்டு ஐந்து முறை குட்டி வழிபடுவது தேவகுட்டு. |
| வினா 13 | ராக்ஷத குட்டு, தேவ குட்டு, இதன் விளக்கம் என்ன? |
| விடை | கஜமுகாசுரனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் தினமும் அவன் முன் தமது தலையில் மூன்று முறை குட்ட வேண்டும் என கட்டளையிட்டிருந்தான். அதனால் தேவர்கள் கஜமுகாசுரன் முன்னால் மூன்று முறை குட்டி வணங்கினார்கள். விநாயகர் அருளால் கஜமுகாசுரன் அழிந்தபின் தேவர்கள் விநாயகரை நோக்கி, சுவாமி இதுவரை காலம் கஜமுகாசுரன் முன் மூன்று முறை குட்டி வணங்கி வந்தோம் இப்பொழுது தேவரீர் எங்களைக் காத்து அசுரனை அழித்துள்ளீர்கள். எனவே தங்களின் முன் ஐந்து முறை குட்டி வணங்குகின்றோம் என கூறி தமது தலையில் ஐந்துமுறை தேவர்கள் குட்டி வணங்கினார்கள். பயத்தின் காரணமாக கஜமுகாசுரனுக்கு முன் மூன்று முறை குட்டி வணங்கியது அசுர குட்டி என்றும் அசுரனிடமிருந்து எம்மைக் காத்த விநாயகர் முன் ஐந்து முறை குட்டி வணங்குவது தேவகுட்டு என்றும் அழைக்கப்படும். |

நீங்கள் ஆன்மிகப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றீர்கள் என்பதற்கு முதல் அடையாளம் உற்சாகம் பெறுவதுதான்.

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள் பற்றி சிந்தனை செய்வாய் மனமே

*சிவநெறிக்கவிஞர். ராகவன் முத்து*

திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டு சிவ ஞானம் பற்றிய சாத்திரங்கள், மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு.

திருமுறைகள் ஓதத் தொடங்கும்பொழுது, பிடியதன் உருஉமை, நம்கடம்பனைப் பெற்றவள், சமர சூரபன்மாவை- என்று தொடங்கும் மூன்று திருப்பாடல்களையும் பாடிவிட்டு, அதன் பின்னரே திருமுறைகளை ஓதுதல் மரபு.

தில்லையில் மறைந்துகிடந்த திருமுறைகளைக் கணபதியின் கருணையினால் உலகிற்கு எடுத்தருளித் தொகுத்து வழங்கியவர் நம்பியாண்டார் நம்பி ஆவார்.

பன்னிரண்டாம் திருமுறை ஆகிய பெரியபுராணம் அடியார்கள் வாழ்க்கையை விரித்துக்கூறும் வரலாற்றுநூல் ஆகும். அதற்குத் திருத்தொண்டர் புராணம் என்றும் பெயர். அதை அருளியவர் சேக்கிழார் பெருமான்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டர்த் தொகை (ஏழாம் திருமுறை) யை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி (பதினோராம் திருமுறை) யை வகை நூலாகவும், பெரியபுராணத்தை விரிநூல் ஆகவும் கூறுவர். இவற்றுள் முதல் நூலைத் தொகைநூல் என்றும் சொல்வர். தொகை நூலும், விரிநூலும் இறைவனார் திருவாயினாலேயே அடியெடுத்துக் கொடுத்துத் தொடங்கிவைக்கப்பெற்றன.

திருமுறைகள் 12ல் முதல் 03 திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளியவை. 4,5,6 ஆகிய அடுத்த 3 திருமுறைகள் அப்பர் பெருமான் அருளியவை. ஏழாம் திருமுறை சுந்தரர் அருளியது.

எட்டாம் திருமுறையாவது மணிவாசகப் பெருந்தகை அருளிய திருவாசகம், திருக்கோவையார் இரண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் திருமுறை பலர் பாடிய பாடல்கள் கொண்டது- திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டும் இந்தத் திருமுறையில் இடம்பெறும்.

பத்தாம் திருமுறை- திருமூலர் அருளிய திருமந்திரம்- மூவாயிரம் பாடல்கள் கொண்டது.

பதினோராம் திருமுறையில் பலர்பாடிய பல்வகைப் பாடல்கள் இடம்பெறும்.

பன்னிரண்டாம் திருமுறை, சேக்கிழார் அருளிய பெரியபுராணம் ஆகும்.

சிவபெருமான் இயற்றி வழங்கிய பாடல் பதினோராம் திருமுறையின் முதற்பாடலாக அமையும். இயற்றியவர் திருவாலவாயுடையார் என்ற குறிப்புடன் இடம்பெறும். அப்பாடலுக்குத் திருமுகப்பாசுரம் என்று பெயர். தன் அன்பர் பாணபத்திரருக்காக, இறைவன், சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதியனுப்பிய கடிதம் (திருமுகம்) தான் அந்தப்பாடல்.

திருமுறைப்பாடல்களைக் கண்டெடுத்துத் தொகுத்தருளிய நம்பியாண்டார் நம்பியின் பாடல்களும் பதினோராம் திருமுறையில் இடம்பெறுகின்றன. திருஞானசம்பந்தர் மீது ஆறு சிற்றிலக்கியங்களும், திருநாவுக்கரசர் மீது ஒன்றும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திரு அந்தாதியும் 11ம் திருமுறையில் இடம்பெறும்.

ஆனைமுகப் பெருமானைப் போற்றும் மூன்று மாலைகள் பதினோராம் திருமுறையில் உள்ளன. அவை கபிலதேவர், அதிராஅடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய மூவரால் அருளப்பெற்றன. (Each one)

திருமுறை ஆசிரியர்களில் இடம்பெறும் பெண்பாற்புலவர் காரைக்கால் அம்மையார் ஆவார். (வைணவத்திலும் திவ்வியப் பிரபந்த பாடல்களை- பாசுரங்களை- வழங்கி அருளிய ஆசிரியர்கள் மொத்தம் 12 பேர். அவர்களை ஆழ்வார்கள் என்பர். அவர்களில் ஆண்டாள் என்ற கோதை நாச்சியார் மட்டுமே பெய்பாலார்.

**பஞ்சபுராணம் மரபு**

திருமுறை நூல்களில் வெண்பா வடிவில் உள்ள திருப்பாடல்கள் திருவாசகத்திலும் பதினோராம் திருமுறையிலும் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

சிவன்- இறைவன் தன்கையால் எழுதியருளிய திருவாசகம்.

சிவபெருமானைப் பூசை செய்யும் போதும் வழிபாடு செய்யும் போதும் அநுட்டான விதிகள் மேற்கொள்ளும் போதும், பஞ்சபுராணம் பாடல்கள்" ஓதுவது மரபாகும். தேவாரம்-01 திருவாசகம்-01, திருவிசைப்பா-01, திருப்பல்லாண்டு-01, பெரியபுராணம்-01 என்று இவ்வரிசையில் மொத்தம் ஐந்து பாடல்கள் பாடப்பெறுவது அம்மரபு. அம்மரபில், பாடல்கள் விண்ணப்பம் செய்யப்பெற்றன என்று கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு முன் "திருவெம்பாவைக்காலம்" தொடங்குகிறது என்பர். பத்தாவது நாள் முழுமதி (பௌர்ணமி- Full Moon) நாளாகிய திருவாதிரை ஆக அமையும்.

இக்காலத்தில் திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருவெம்பாவையை மட்டுமே ஓத (பாராயணம் செய்ய) வேண்டும் என்பர். அது சமயம் மற்ற திருமுறைப் பாடல்கள் காப்பிடப் பெற்றன (Frozen) என்பது வழக்கம்.

திருவாசகம்- இறைவனே கையால் எழுதிய பெருமை உடையது. திருவாசகத்தை முதலில் ஜீ.யூ.போப் என்ற ஆங்கிலப்பாதிரியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

சிவபெருமானுக்கு எண்ணற்ற சிறப்புப் பெயர்களை நூல்கள் வழங்கும். இவற்றுள், தமிழ்ப்புலவர்கள் கொண்டாடி மகிழும் பெயர். பிறவாயாக்கைப் பெரியோன்" என்பதாகும். இப்புகழ்மொழியை வழங்கியவர் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் ஆவார்.

சைவத்தலங்களில்- பாடல் பெற்ற சிவத்தலங்கள் மிகவும் சிறப்புக்குரியவை. அவற்றில் மிகமிகச் சிறப்புக்குரியவை. அவற்றில் மிகமிகச் சிறப்பித்துக் கொண்டாடப் பெறும் தலங்கள் நான்கு. அவையாவன தில்லை, திருவண்ணாமலை, திருவாரூர், காசி என்பனவாம். திருவாரூரிற் பிறந்தாலே முத்திகிட்டும். தில்லையைக் கண்டுதொழ முத்திதரும். காசியில் உயிர்துறக்க முத்திவரும். திருவண்ணாமலையை நினைத்தாலே முத்தி கிடைக்கும் என்பது மரபு.

பொன்னம்பலம் என்பது தில்லைச் சிற்றம்பலம் ஆகிய சிதம்பரத்தையும் வெள்ளையம்பலம் என்பது திருஆலவாய் ஆகிய மதுரையையும் குறிக்கும்.

இறைவன் திருக்கூத்து (நடனம்) மேற்கொள்ளும் இடங்கள் ஐந்து ஆகும். அவையாவன

1. பொன் அம்பலம்- கனகசபை
   (தில்லை- சிதம்பரம்)
2. வெள்ளி அம்பலம் - ரஜதசபை
   (மதுரை - கூடல்)
3. இரத்தினசபை- திருஆலங்காடு
4. தாமிரசபை- திருநெல்வேலி
5. சித்திரசபை- திருக்குற்றாலம்

ஆடல் வல்லான் ஆகிய நடராசப் பெருமான் திருமஞ்சனம் (அபிஷேகம்) கொள்ளும் மிக உயர்ந்த நாள்கள் ஆறு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மார்கழித் திருவாதிரை (முழுமதி நாள்)
2. மாசிச் சதுர்த்தசி
3. சித்திரைத் திருநாள்
4. ஆனி உத்தரம்
5. ஆவணிச் சதுர்த்தசி
6. புரட்டாசிச் சதுர்த்தசி

என்ற ஆறு நாள்கள் நடராசர் அபிஷேகச் சிறப்பு நாள்கள் ஆகும். மேற்கூறிய நாள்கள் முறையே-

1. விடியல்வேளை (வைகறை)
2. காலசந்தி
3. உச்சிக்காலம்
4. திரு அந்திக்காப்பு
5. இரண்டாம் காலம்
6. அர்த்தசாமம்

என்று கூறப்பெறும் மனித உலகின் ஒரு ஆண்டுக்காலம், தேவர் உலகில் ஒரு நாள் என்ற கணக்கினடியாக இம் மரபு கூறுவர்.

## முருகன் புகழ்பாடும் திருகவேள் பன்னிரு திருமுறை

சிவபெருமான் புகழைப்பேசும் தமிழ்ப் பாடல்கள் திருமுறைகள் என்று போற்றப்பெறுவதுபோல், முருகப் பெருமானைப்பாடி மகிழும் தமிழ்ப் பாடல்களும் தொகுக்கப் பெற்ற, முருகவேள் பன்னிரு திருமுறை என்று வகுக்கப்பெற்றுள்ளன. அவ்வரிய திருப்பணியைச் செய்தருளியவர் தணிகைமணி ஸ்ரீமான் வ.சு.செங்கல்வராய பிள்ளை அவர்கள்.

சைவத் திருமுறைகளில் 12வது திருமுறை சிவனடியார் வரலாறு கூறும் பெரியபுராணம் ஆவது போலவே, முருகவேள திருமுறைகளின் 12வது திருமுறையும் வரலாற்று நூலாய் அமையும். முருகன் அருள்பெற்ற அடியார்களின் வரலாற்றைப்பாடும் அத்திருமுறைக்கு சேய்த்தொண்டர் புராணம் என்று பெயர். அதனை இயற்றி அருளியவர் வரகவி சொக்கலிங்கனார் என்ற புலவர்.

முருகப் பெருமானைப் போற்றும் சங்க இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படை, பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

## முக்கண்களாக உள்ள மூன்று புராணங்கள்

புராணங்கள் மொத்தம் பதினெட்டு என்றும், அவற்றைத் தொகுத்து வழங்கியவர் வியாசமுனிவர் என்றும் கூறுவர். வியாசர் தொகுத்த பதினெண்புராணங்களில் சைவம் பற்றியன பத்து நூல்கள் என்ப. அவையாவன, சைவம், மார்க்கண்டேயம், பவிடியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மச்சம். வாயவியம் என்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தார் போற்றிக் கொண்டாடும், பூசிக்கும் புராணங்கள் மூன்று. அவை இறைவனாகிய சிவபெருமானின் முக்கண்களை ஒத்தவை என்பர் அறிஞர். அடியார்களின் அக இருளை நீக்கும் பெரியபுராணம், ஞாயிறு ஆகிய வலக்கண்ணை ஒலிக்கும். சந்திர குலத்தில் வந்த பாண்டிய மரபில் அவதாரம் செய்த சிவபிரானின் திருவிளையாடல்களைப் பாடும் திருவிளையாடற்புராணம், திங்கள் ஆகிய இடக்கண்ணை ஒக்கும். நெற்றிக் கண்ணில் இருந்து சோதிப்பிழம்பாய்த் தோன்றிய முருகன் வரலாற்றைக் கூறும் கந்தபுராணம், நெற்றிக்கண் ஆகிய நெருப்புக் கண்ணை ஒத்ததாகும்.

மதுரையம்பதிக்குத் தலபுராணம் என்ற திரு விளையாடற்புராணம் பேசப்பெறும். இந்நூலில் ஆடவர்க்குரிய அங்க இலக்கணம் (சாமுத்திரிகா லட்சணம்) மிகச்சிறப்பான பகுதியாக அமைந்துள்ளது.

## நால்வர் நினைவுக்கு நற்பாடல் இரண்டு

சைவ சமயத்திற்கு உற்ற மற்றும் ஏற்ற ஆசிரியர்கள் (குரவர் =Plural of குரு) நால்வர் ஆவர். அவர்களின் வாழ்நாள் எல்லையையும் அவர்கள் திருவருளிற் கலந்து முத்தி பெற்றநாள் நட்சத்திரக் குறிப்பையும் மறவாது நினைவிற் கொண்டு வழிபாடு செய்து, சிந்தித்து, பயன்பெற வேண்டும் என்பது அதீத சைவர்களின் நெறி மரபு. அதற்குத் துணையாக, இரு பாக்களைப் போற்றி வழங்குவர்.

அப்பருக்கு! எண்பத்தொன்று: அருள்வாதவூரர்க்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம்- இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு: தொல்ஞான சம்பந்தர்க்கு
அந்தம் பதினாறு அறி.

சித்திரைச் சதயம் அப்பர், சிறந்தவை காசி மூலம்
அத்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

என்ற இருபாடல்களும் சைவ அன்பர்கள் நினைவிற் கொள்ளும் பாடல்கள் ஆகும்.

சமயாச்சாரியர்கள் நால்வரின் சிறப்பையும் போற்றும் ஒப்பற்ற நூல் நால்வர் நான்மணிமாலை ஆகும். இதை இயற்றியவர் துறைமங்கள சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர்.

நால்வர் மீதும் அரிய, சித்தாந்தக்கூறுகள் உள்ளடங்கிய பிள்ளைத்தமிழ் நூலும் இயற்றப்பெற்றுள்ளது. அதனை அருளியவர் காரைக்குடி சிவபூசைச் செல்வர் "சித்தாந்தம்" சொக்கலிங்க ஐயா அவர்கள்.

திருமுறைகள் "தோத்திர நூல்கள்" என்று சைவ சித்தாந்த நூல்கள் "சாத்திர நூல்கள் என்றும் வழங்கும் மரபு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள் ஓதத்தொடங்கும் முன்பு திருசிற்றம்பலம் என்று கூறித் தொடங்குதலும், நிறைவு செய்யும் பொழுது, வாழ்த்துப்பாடல் பாடியபின் திருச்சிற்றம்பலம் என்று நினைவு செய்தலும் மரபு.

கோயில் என்று பொதுவாகச் சொன்ன சைவர்கட்குத் தில்லைப் பெருங்கோயிலையும் (சிதம்பரம்) வைணவர்கட்குத் திருவரங்கத்தையும் உணர்த்துவதாகும்.

நட்சத்திரங்கள் மொத்தம் இருபத்து ஏழு ஆகும். அவற்றில் "திரு" என்ற .....இரண்டும் திரு ஆதிரையும் திரு ஓணமும் ஆகும். இவை முறையே சிவபிரானுக்கும் திருமாலுக்கு உகந்தவையாகும்.

நாயன்மார் திருக்கூட்டமாகிய அறுபத்து மூன்று தனியடியார்களில் பெண்மக்கள் மொத்த.... மூவர் அவர்கள்- காரைக்கால் அம்மையார் மங்கையர்க்கரசியார், இசைஞானியார் என மூவரும் ஆவர்.

கயிலைக் கடவுள் ஆகிய சிவபிரான், இரண்டு பேர்களைத் தோழர்களாய்க் கொண்டார். ஒரு இருநிதிக் கிழவனாகிய பெரும் பொருட்செல்வன் குபேரன், மற்றொருவர், நிறைந்த தமிழ்ப்புலமை செல்வராகிய சுந்தரமூர்த்தி அடிகள். (நால் நான்மணிமாலை)

## நேர்மையும் சிரத்தையும்

வாழ்க்கையில் வெற்றி பெற்ற
ஒவ்வொருவரின் பின்னணியில்
அளவற்ற நேர்மையும், அளவற்ற
சிரத்தையும் இருந்துள்ளமையை அறிந்து கொள்ளலாம்

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவாலயங்களும் வழிபாடும்

*பண்டிதர்.தி.பொன்னம்பலவாணர்*

பெருமைகள் பல உள்ள எம் சைவ சமயத்தவர்கள் பலர் சைவாலயங்களின் தன்மைகளையும், அங்கு வழிபாடு செய்யும் முறை, அதனால் வரும் பயன்கள் என்பன பற்றியும் தெளிவான சரியான விளக்கம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

யுத்த நெருக்கடி - புயல்- வெள்ளப்பெருக்கு போன்ற சந்தர்ப்பங்களில் பலர் முகாம் வாழ்வில் சிறுமைப்படுவர். அப்படியான நெருக்கடியிலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஒரு பாடசாலை வாசிகசாலைவழிபாட்டு இடம் என்பன இருக்கும். ஆனால் இன்று எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக அமையுமே அன்றி சரியான திட்டமிடலிலும் உரிய தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் திருப்திகரமாக விளங்குவதில்லை.

முகாம் வாழ்வில் அமையும் வழிபாட்டு இடம் சகல வசதிகளுடனும் அமையும் வாய்ப்பே நமது ஆலயங்கள் என்று பலர் கருதுகின்றனர். அதாவது நாம் இறைவனை நினைந்து வணங்கி நலமடைதற்கு உரிய இடங்களே நம் ஆலயங்கள் என்று நம்புகின்றனர். இதனால் தம் வசதி, தம் விளக்கம் என்பவற்றுக்கு ஏற்ப ஆலயங்களில் வழிபாடு செய்யவும், இறை அருள் பெறவும் முயல்கின்றனர்.

இப்படியான நிலை நம் சைவ மக்கள் மத்தியில் உண்டானதற்கு உரிய காரணம் சமய அறிவு- ஆலயங்கள் பற்றிய விளக்கம்- ஆலய வழிபாடு செய்யும் முறை பற்றிய அறிவு பயிற்சி என்பன இல்லாமையேயாகும்.

சைவ ஆலயங்கள் அமைப்பதற்கு இடம்தேர்வு செய்தல் முதல் அங்கு கும்பாபிஷேகம் செய்தல் வரையுள்ள அணுகுமுறைகள் மந்திர பூர்வமான கிரியைகள் யாவும் உயிர்க்கு உயிராகவும் உலக காரணராகவும் உள்ள இறைவனை வெளிப்படைய ஆலயத்தில் எழுந்தருளியிருக்கச் செய்யும் முயற்சிகளேயாகும். இம்முயற்சிகளுக்கு ஆதாரம் இறைவாக்குகளாகிய சிவாகமங்களேயாகும். எனவே மிகமிகப் புனிதமும், ஒவ்வொருவரின் அகத்தையும் புறத்தையும் தெளிவாக அறியும் பேரறிவும் நிறைந்த இறைவன் விறகில் நெருப்புப் போலவும், பாலில் நெய்போலவும், மறையாது இரத்தினக் கல்லில் ஒளிபோல வெளிப்பட்டு விளங்கும் இடங்களே நமது ஆலயங்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை ஒவ்வொருவரும் எந்நேரமும் நினைவிலே வைத்திருக்கவேண்டும்.

பலர் பிரயாணம் செய்யக்கூடிய "பேருந்து" எனும் வாகனம் ஒன்று, தகுதியும் அநுபவமும் உடைய ஓட்டுநர் இல்லாதபோது பயன்தராது. மிகவும் தகுதிமிக்க தொலைக்காட்சிப்பெட்டியும் அதற்கு அவசியமான மின்சாரமும் இருந்தபோது அதனை இயக்கி பயன்பெறத்தெரியாதவர் விடயத்தில் பயன்தராமல் வீணாக இருப்பதுபோல ஆலயத்தில் வழிபடவேண்டிய செயல்முறைகளை நன்கு தெரிவிக்கும் சிவாலய தரிசன இயல்" என்னும் சைவவினாவிடைக் கருத்துக்களை நன்கு தெரிந்தவராயிருந்தாலும், இரக்கம், உண்மை, தெய்வ நம்பிக்கை, குருவிசுவாசம், பக்தி என்னும் குணங்கள் இல்லாதவருக்கு தெய்வ அருளும், பாவநீக்கம், துன்பநீக்கம் என்பன கிடைப்பது அரிது.

தோத்திரம் செய்தல், வலம் வருதல், அட்டாங்க பஞ்சாஞ்க நமஸ்காரம் செய்தல் என்பன பற்றி அறிவும் பயிற்சியும் ஆலய வழிபாடு செய்யும் ஒவ்வொருவருக்கும் தேவை.

ஆலயத்தை வலம் வருவது எப்படி அட்டாங்க பஞ்சாஞ்க நமஸ்காரம் செய்வது எப்படி என்பன இக்காலத்தில் பலருக்குத் தெரியாது.

பலர் வேகமாகவும், தம் நண்பர்களுடன் ஊர்க்கதைகள் கதைத்துக் கொண்டு வலம் வருகின்றார்கள். சிலர் அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் போது கிழக்கிலோ வடக்கிலோ கால்களை நீட்டுகின்றனர். இவை எல்லாம் தவறு என்று நம் சமய நூல்கள் விலக்குகின்றன.

மிக மிக மெதுவாகவும், இறை சிந்தையுடனும் வலம்வரல் வேண்டும். முதல் முறை வலம் வரும் போது மட்டும் உள்வீதியில் உள்ள சிற்றாலயங்களை வலம்வரவேண்டும். சுவாமி வீதி வலம் வரும் போது சுவாமியைத் தொடர்ந்து வலம் வரவேண்டுமேயல்லாது, சுவாமியை விலத்தியோ சுவாமிக்கு முன்பாகவோ வலம் வரலாகாது.

அபிஷேகம் நடக்கும் போதும் வலம் வரலாகாது. சுவாமியுடனே சுற்றுப்பலிதேவருடனே வலம் வருவது சிறப்பானது என்பன போல பல கருத்துக்கள் உண்டு. இவற்றை அறியாமலும், அறிய விரும்பாமலும் இருப்பதால் ஆலயவழிபாட்டால் அடையத்தக்க நலன்களை இழப்பதே பயனாகமுடியும்.

சிவாலய கைங்கரிய இயல் என ஒரு பாடம் 2ம் சைவவினாவிடையில் உள்ளது. பூசைக்கு பூ எடுத்துக் கொடுத்தல்- மாலை கட்டுதல்- ஆலய வீதிகளைக் கூட்டுதல், கழுவுதல் என்பன எப்படிச் செய்யவேண்டும் என இப்பாடத்தில் உள்ளது.

பூசைக்கு உபயோகமாகும் மலர்களை வண்டுகள் தேனீர்கள் எச்சிறபடுத்து முன், நீராடி சந்தியாபந்தனம் செய்தே எடுக்கவேண்டும். அதிகாலையில் மரங்களில் ஏறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மலர்களைப்பார்த்து எடுப்பதற்காக ஒரு முனிவர் புலிக்கால், புலிநகம் விரல்களில் கண் என்பவற்றைத் தவம் செய்து பெற்றார் என்றும், அப்படிப் பெற்றதால் அவருக்கு வியாக்கிரபாத முனிவர் எனப் பெயருண்டானது என்னும் வரலாறு ஒன்று உண்டு.

தூய்மையும் தகுதியில் இல்லாதவர் எடுத்த மலர்களை இறைவனுக்குச் சமர்ப்பிப்பது மலர்களுக்குப் பதிலாக நெருப்பை அள்ளிச் சமர்ப்பிப்பது போன்ற தவறான பாபமான செயல் என்று குகைளமச்சிவாயர் என்ற முனிவர் பாடியுள்ளார். யாழ்ப்பாணத்து யோகசுவாமிகள் போன்ற பெருமையுடன் திருவண்ணாமலையில் வசித்தவர் குகைளமச்சிவாயர் ஆவர்.

இக்காலத்தில் பலர் கோவிலுக்குச் செல்லும் போது நண்பர் வீட்டுக்கோ, உறவினரிடமோ செல்கின்றனர். அதேபோல் கோவிலால் வீட்டுக்கு வரும் போது கடைக்கோ, வேறு இடங்களுக்கோ செல்லும் அலுவல்களுடையராய் இருக்கின்றனர். இதனால் நீராடி தோய்த்துலர்ந்த தூய ஆடை அணிந்து கோவிலுக்குச் செல்லுதல் என்ற தன்மை இல்லாதுள்ளது. கடைக்கோ உறவினர் வீட்டுக்கோ செல்லுதற்குரிய உடைகளுடனேயே கோவிலுக்குச் செல்கின்றனர். வீட்டிலிருந்து கோவிலுக்குச் செல்லல்-கோவிலிலிருந்து வீட்டுக்குச் செல்லல் என்பதில் தூய்மை சிரத்தை தெய்வீகம் என்பன அதிகம் இருக்கும். பல சாட்டுகளை முன்னிட்டு இப்படியான தூய்மை சிரத்தை தெய்வீகம் என்பன இல்லாததாக பலரிடம் ஆலய வழிபாடு மாறிவிட்டது.

"குறிக்கொடிருமின் திருக்குறிப்பை" என்று திருவாசகத்தில் ஒரு கருத்து உள்ளது. அமைதியாகவும், பொறுமையாகவும், கணிசமான நேரம் ஆலய வழிபாட்டில் தெய்வத்துடன் தொடர்பு கொள்ளும் மனநிலையில் நாம் ஈடுபடும்போது இறைவனுடைய திருக்குறிப்பு என்ன என்பதை எம் மனம் அவதானிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். இப்படியான வாய்ப்புக்குச் சந்தர்ப்பம் இல்லாத விதத்திலேயே பலரின் ஆலயவழிபாடு முடிந்து விடுகின்றது.

வாழ்க்கைப் பிரச்சினை சமுதாயப்பிரச்சினை - அரசியல் பிரச்சினை எனப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டி ஆலய வழிபாட்டை செய்ய விரும்பும் பலருக்கு ஆலய வழிபாடு பிரச்சினைகளைத் தீர்க்கும் தெய்வத்துணையைப் பெறும் தூய செயலாக அமையாமல் ஆலயவழிபாடும் ஒரு பிரச்சினையாக அமைந்து விடுகின்றது. ஆலயத்தை நிர்வகிப்போரை ஆலய குருமாரை ஆலய வழிபடுவோரைக் குறைசொல்லும் தன்மை இன்றைய சைவ மக்கள் மத்தியில் சாதாரணமாக உள்ளது. இது பிற பிரச்சினைகளுடன் ஆலய பிரச்சினையும் ஒன்று அதிகரித்துள்ளதையே காண்பிக்கின்றது. இப்படியான தன்மைகள் நீங்கி ஆலய வழிபாடு தெய்வீகம் நிறைந்ததாகவும் பிரச்சனைகளுக்கு தீர்வு தரும் தெய்வத்துணைக்குக் காரணமானதாகவும் அமைய ஒவ்வொரு சைவ சமயிக்கும் சமய அறிவும் அந்த அறிவின் பயனான சமய ஒழுக்கமும் அவசியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப்பிறவியின் உயர்நோக்கத்தை நிறைவு செய்கின்றன

குமாரசாமி சோமசுந்தரம்

ஆலயம் ஆண்டவனின் சந்நிதியாகும். இறைவனின் ஆலயம் ஆன்மீகத்தை விளங்க வைக்கிறது. ஆன்மீகம் மனித வாழ்க்கையுடன் கலக்கும் போதே, வாழ்க்கை செழுமையும் சீரும் பெறுகிறது. இதனாலேயே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று," என்றும் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் ஆன்றோர்கள் கூறிவைத்துள்ளனர்.

சைவப்பண்பாட்டின் சிகராமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

இறைவன் உயிர்க்கு உயிரானவன், எம்மையெல்லாம் படைத்துக், காத்து அருள்பாலிப்பவன். இப்பிரபஞ்சம் முழுவதற்குமம் கருத்தாவாக உள்ளவன். எங்கள் யாவரினதும் ஒப்பற்றதலைவன். அவன் எம் இறைவன் திருவருட் சக்தியோடு கூடியிருப்பதால், "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறார் உமாபதிசிவம்.

சைவம் சிவசம்பந்த முடையது. சிவம், சக்தி சம்பந்தமுடையத்து. சிவம் இன்றேல் சக்தி இல்லை. சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவசக்தி இணைப்பு. சைவத்தின் சிறப்பு இதனை விளக்குவது அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் "அம்மையே அப்பா" எனத் தீர்த்தமாகக் கூறுகிறார் மாணிக்கவாசகப் பெருமான். சிவபெருமானைத் "தோடுடைய செவியன்" ஆகவே திருஞானசம்பந்தர் தரிசித்துள்ளார். கண்டதைக் கண்டபடி, உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பு மூன்று வயதுக் குழந்தையுடையது. தோடு, பெண்கள் அணியும் ஆபரணம், குண்டலம் ஆண்கள் காதில் அணியும் ஆபரணம் என்பது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள், ஆகமங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. நித்திய, நைமித்தியக் கிரியைகள், வழிபாடுகள் என்பனவும், ஆகம விதிப்படியே நடத்தப்படுகின்றன. தெய்வ சாந்நித்தியம் ஆலயங்களில் பேணப்படுவதற்கு இவையே அநுசரணையாக உள்ளன.

ஆலயங்கள், தனிமனித நல்வாழ்விற்கும், நாட்டின் வளம் மற்றும் ஆட்சி மேம்பாட்டிற்கும், உலகத்தவர் நன்மைக்கும், பண்பாட்டு, ஒழுக்க வளர்ச்சிக்கும், சமூக கலை கலாச்சார விருத்திக்கும் நிலைக்களனாக விளங்கி வருகின்றன. ஆன்மீகப் பண்பாட்டின் ஊற்றுக்கண் ஆலயங்களேயாகும்.

*ஆலயம் ஏன்?*

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து, எல்லாவிடமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளுக்கு நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து சுவர்கள் அமைத்து ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் கோயில் நிறுவி, அதனாலேயே இறைவனின் இல்லமாகக் கொள்ளுதல் எவ்வாறு அறிவிற்குப் பொருந்தக்கூடியதாகும் என வினா எழுப்புகிறார்கள் சிலர். அவர்களுக்குத் தக்க பதில் அளிக்கவேண்டியது நம் கடமையாகும்.

கடவுள் என்னும் பதத்தின் பொருளை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்பவற்றிற்கு எட்டாததும் அவற்றின் எல்லையைக் கடந்தும் அற்றிற்கு உள்ளும் நிற்கும் பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் எனப்படுகிறது. அவ்வாறிருக்கும் கடவுள் எவர் கண்ணிற்கும் புலப்படக்கூடிய பொருள் அன்று அதுவே கடவுளின் இயல்புமாகும். கடவுளின் சுயநிலை அருவம் அதாவது உருவற்றது. உரையற்றது. குணங்குறிகள் அற்றது. நாமமற்றது.

அருவமாக எங்கும் எதிலும் நிறைந்துள்ள கடவுளை தியானிக்கவோ, அதனுடன் உறவு கொள்ளவோ, பேசவோ ஞானிகளுக்கு மட்டுமே இயலும். எம்மில் மிகப்பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். நாம் சிற்றறிவும் சிதறிய எண்ணங்களும் உடையவர்கள். ஒருகணமேனும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறன் அற்றவர்கள் அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் செய்யவேண்டுமாயினுஞ் சரி, கடவுளை வேண்டுதல் செய்யினுஞ் சரி, ஏன் கடவுளை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட நமக்கு எம் முன்னால் ஒன்றை உருவாக முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக்கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு மலையைப் பற்றிய எண்ணக்கருவை ஏற்படுத்துதற்கு, ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்கவேண்டும் அல்லது மலையின் மாதிரி உரு ஒன்றை காட்டவேண்டும். முதிர்ச்சி குறைந்த பிள்ளைகள் தூலமாக ஒரு பொருளைப் பார்க்காமல் அதுபற்றிய விளக்கத்தைப்பெற மாட்டார்கள். ஒன்றை விளக்கிக்கொள்வதற்கு அவர்களுக்கு நேரடி அனுபவம் தேவையாகும். அவ்வாறே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களுக்கும் கடவுளை அருவமாக தியானிப்பதற்கோ, அருவ நிலையான கடவுளுடன் பேசுவதற்கோ சிரமமாக உள்ளது. இந்த நிலையில் ஒன்றில் உருவம் தேவைப்படுகின்றது. அன்றேல் உருவத்தின் சாயல் ...ண்டப்படுகிறது. இவற்றுள் ஒன்றையேனும் முன்னிலைப் படுத்தாமல் சாதாரண மக்களுக்குக் கடவுள் பற்றிச் சிந்திக்கவோ, தியானிக்கவோ, அல்லது கடவுளுடன் பேசவோ, உறவாடவோ இயலாமற் போய்விடுகிறது. காமங்களின் தோற்றம் எமக்கு எந்த வகையில் பரிசோதனையை தீர்ப்பதற்கு உத்விற்று என்பது சிந்திக்கற்பாலது.

ஆலயங்களை அமைப்பதற்கும் தேவப்பிரதிட்டைக்கும், நித்திய, நைமித்தியக் கிரியைகள் வழிபாடுகள் மூலம் தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதற்கும் சிவாகமங்களே வழி வகுத்தன. உருவப்பாட்டை அதிகார பூர்வமாக்கி பெருமை ஆகமங்களைச்சாரும். கடவுளை உருவாக முன்னிலைப்படுத்தித் தியானிக்கவும், வழிபடவும், கடவுளுடன் பேசவும், உறவாடவும் சாதாரண மக்களுக்கு இயலுதவதாயிற்று. ஆலயங்கள் ஏன், என்பதற்கு இப்பொழுது கிடைத்துள்ளதல்லவா.

**ஆலயத்தில் அமைதியும் தூய்மையும்**

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. அவை ஆலயத்திற்கும் சாந்நித்தயித்தை ஏற்படுத்துபவை. அதனால் ஆலயத்தில் அமைதியையும், தூய்மையையும் நிலவச் செய்ய வேண்டியது வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்கிளன் கடமையும் பொறுப்புமாகும். "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என மெய்கண்டார் நமக்கு அறிவிக்கின்றார். ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு அங்கமும் தொழுது வணங்குதற்குரியவை. வணக்கத்திற்குரிய இடம் தூய்மையாக வைத்திருத்தலும், ஆங்கு அமைதி பேணப்படுதலும் அவசியமாகும்.

ஆலயங்களில் இறை சிந்தனையோடு மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்வதற்கு ஆலயச் சூழலில் அமைதி இருக்க வேண்டியது முதல் நிபந்தனையாகும். கவனக் கலைப்பான்கள் காணப்படின், மன அடக்கம் புலன் அடக்கம் இரண்டுமே கலைந்துவிடும்.

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் முறை, மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் எல்லாமே சைவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்கு அவர்களில் பெரும்பாலானோர் நடந்து கொள்ளும் விதம், அவை யாவற்றையும் மீறுவதாகவே காணப்படுகிறது. தெரிந்து கொண்டு செய்யும் குற்றங்கள் மகாபாவம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பாவங்களுக்கு விமோசனம் கிடையாது. குளிக்கப்போய்ச்சேறு பூசி கொள்ளுதலுக்கு இது சமமாகும்.

கோயிலுக்குள், கோபுர வாயிலினூடாகவே செல்லுதல் வேண்டும். அவ்விடத்தில் சிலர் கூடிநின்று பேசிக்கொண்டும், வீண் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டும், ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கொண்டும் இருந்தால், பிறருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறுகளை விளைவித்தவர்கள் ஆகின்றனர். அத்துடன் அமைதிக்குப் பங்கமும் ஏற்படுகின்றது. இதைப் பலர் சிந்திப்பதில்லை.

அமைதி தேடி ஆண்டவன் சந்நிதிக்கு வந்தும் அங்கேயும் அமைதி இல்லையென்றால், வேறெங்குதான் அமைதியைக் காணமுடியும். இவ்வாறு கேட்டு எத்தனையோ அடியார்கள் கவலை கொள்கிறார்கள்.

சில கோயில்களின் உட்பிரகாரங்களில் ஒலி பெருக்கிகளை அமைத்து அடிக்கடி ஒலிபரப்புகின்றனர். பக்தி பாடல்கள் என்ற பெயரால் ஒளிகளை உரக்கக் கிளப்புகின்றனர். இத்துணை சத்தங்கள், இரச்சல்களின் மத்தியில் மனத்தை ஒருமுகப்படுத்தி, இறைவனை வழிபாடு செய்வதென்பது எப்படிச் சாத்தியமாகும்.

அமைதி, சாந்தி, நிம்மதி- இவை தான் இன்று எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை. இவை வீட்டில் இல்லை, வேலைத்தளத்தில் இல்லை, வாழும் சமூகத்தில் இல்லை, ஏன் நாட்டிலும் இல்லை இவற்றை ஆலயங்களில் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

அமைதி பேணல், தூய்மை பேணல், வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல், பிறருக்கு இடையூறுகள் தொல்லைகளை ஏற்படுதாதிருத்தல், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துதல் என்பவற்றின் மூலம், திருவருட் துணைகொண்டு திருக்கோயில்களில் தெய்வ சாந்நித்தியம் நிலைபெறச் செய்தல் வேண்டும்.

**செய்யத் தகாதன**

திருக்கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு, நித்திய நைமித்திகங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்று தெய்வ சாந்நித்தியம் நிலவ வழி செய்யப்படுகின்றது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகமங்களில் விதிக்கப்பெற்றிருப்பவற்றிற்கு புறம்பாக எதுவும் நடைபெறக்கூடாது. நடைபெற அனுமதித்தலும் ஆகாது.

சுவாமி விக்கிரங்களை சிவாச்சார்யர்கள், அச்சகர்கள் என்போரைத் தவிர வேறெவரும் தீண்டுதல் ஆகாது என்பது விதி. ஆனால் வழிபடுவோர் சிலர் விக்கிரகங்களைத் தொட்டு தீண்டுவதையும், கைகளால் அனைவதையும் காண்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டுவந்து வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியார் பூசை செய்யும் போதும், வழிபடுவோர் மலர்களையும் பத்திரங்களையும் விக்கிரங்கள் மீது தாமும் போடுகிறார்கள். சிலர் கோயில் மணிகளை தாம் நினைத்தநேரங்களில் அடித்துவிட்டுச் செல்கிறார்கள். சுவாமி திருஉலா வருவதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், ஊர்திகள், பல்லக்குகள் என்பவற்றின் மீது சிலர் ஏறி உட்காருகின்றார்கள். பிள்ளைகளை அவற்றின் மீது சிலர் ஏறி உட்காருகின்றார்கள். பிள்ளைகளை அவற்றின் மீது இருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படங்களும் எடுக்கிறார்கள். இவை யாவும் இன்றைய புதுக் குழப்பங்கள். இவ்வாறு சிலர் செய்வதைப் பார்த்து விட்டு பலர் செய்ய முற்படுகிறார்கள்.

விபூதி பிரசாதங்களை அலட்சியமாக வாங்கி நிலத்தில் சிந்தியும் விடுகிறார்கள். சுவர்கள், தூண்கள், வாகனங்கள் என்பவற்றில் பூசியும் விடுகிறார்கள். பூக்கள், பத்திரங்கள், வில்வங்களைக் கீழே போட்டு விடுவதால் பிறர் கால்களால் அவை மதிக்கப்பட்டு விடுகின்றன. பழங்களை உண்டுவிட்டு அவற்றின் தோல்களை ஆங்காங்கு போட்டு விடுவதால் பிரகாரங்களில் அசுத்தம் ஏற்படுகின்றது. இவையாவும் பாவச் செயல்களாகும்.

விபூதி பிரசாதங்களை இரண்டு கைகளாலும் சிவாச்சாரியாரிடம் பணிந்து வாங்கி பின் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி நெற்றியில் அணிதல் வேண்டும் நெற்றியை நீட்டி வீபூதியை அணிந்து விடும்படி சிவாச்சாரியரைக் கேட்பது முறையன்று. தீர்த்தத்தை இரு கைகளாலும் வாங்கிப்பருகுதல் வேண்டும். தீர்த்தத்தை வாங்கித் தலையிலே பூசிக்கொள்ளுதல் ஆகாது. சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும் போது கோமுகில் வடிந்து வரும் நீரைச் சிலர் எடுத்துத் தீர்த்தமாகப் பருகுகிறார்கள். அதுவும் முறையன்று.

கூந்தலை விரித்து விடுதல், மூக்கு நீர் சிந்துதல், எச்சில் துப்புதல், காறி உமிழ்தல், தும்முதல், இருமுதல் என்பனவற்றையும் ஆலயங்களில் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஆசௌசம் உள்ளவர்களும், வீட்டுக்கு விலக்கானவர்களும், மரணக்கிரியைகளில் கலந்து விட்டும் ஆலயத்திற்குள் செல்லுதல் ஆகாது. இவையாவும் பாவச் செயல்கள் ஆகும். இச்செயல்களால் தெய்வ சாந்நித்தியம் பாதிப்படைகின்றது.

## பிரார்த்தனை

சைவசமயிகள் கடவுள் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள். ஆலயங்களிலும், வீடுகளிலும் பிரார்த்தனைகளைச் செய்யும் வழக்கமே பொதுவாக உள்ளது. பிரார்த்தனைக்கு நேரம், இடம் என்பன இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் இவ்விடத்திலும் "அவன் தாள் நினை" என்று பெரியோர் நமக்கு அறிவுரை பகன்றுள்ளார்கள். இறைவனுடன் நாம் கொள்கின்ற தொடர்பு பிரார்தனையாகும்.

பிரார்த்தனைகள், கடவுட் சிந்தனையைப் பிரார்த்திப்பவர்களின் மனங்களில் நிறைகின்றன. அதனால் மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயற்தூய்மை என்பன ஏற்படுகின்றன. அப்படியானவர்களின் வாழ்க்கையும் தூய்மை கெட்டு விடுகின்றது. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டுவிட்டால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்தப்பெறுவர். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனைகள், காமியம், நிட்காமியம் என இரண்டு வகைகளாக உள்ளன. பயனை எதிர்பார்த்துச் செய்யப்படும் பிரார்த்தனை, காமியம் எனவும், அவ்வாறு பயனை எதிர்பார்க்காது செய்வது நிற்காமியம் என்றும் அழைக்கப்படுகின்றன. பிரார்த்தனைக்கு மன ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியம். இறைவன் மீது கொள்கின்ற அன்பே பக்தியாகும்.

உண்மையானது பக்தி என்பது இறைவனிடம் ஒன்றையும் கேட்காது, அவனைப் பிரார்த்திப்பது அவனுக்குப் பணிந்து நடத்தலும் அவன் எமக்கு தருபவற்றை மனமார ஏற்று மகிழ்வதுமேயாகும். பிரார்த்தனையின் அதி உச்சநிலை, இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்து விடுதலேயாகும். பூர சரணாகதி என்பது இதனையேயாகும்.

கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர் எல்லாம் வல்லவர், எமது தேவைகளையும் விருப்பங்களையும் கடவுள் அறிவார். ஆயினும் எம்மில் பணி உலகியல் ஆசைகளையெல்லாம் பூர்த்திசெய்ய வேண்டியே பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேறாதவிடத்துக் கடவுளை நிந்திக்கின்றோம். இவ்வாறு நடந்து கொள்ளாத பிரார்த்தனையை கொச்சைப்படுத்துவதாக அமையும். எனவே, பிரார்த்தனை செய்தல் எமது பணி, மிகுதியை கடவுள் பார்த்துக்கொள்வர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" "இறைவன் கடன் என்னைத்தாங்குதல் என்கிறார் அப்பரடிகள்.

பிரார்த்தனையை நாம் ஓர் ஆன்மீகப்பயிற்சியாக கொள்ளுதலே முறையாகும். ஆலய தரிசனம், சங்கீர்த்தனம், கூட்டுவழிபாடு, தியானம், ஜெபம், விரதமனுட்டித்தல், தேவார திருவாசக பாராயணம், பூஜை வழிபாடு, சைவ ஒழுக்க வாழ்வு என்பன பிரார்த்தனையின் அங்கங்கள் ஆகும். "பொன் வேண்டான், பொருள் வேண்டேன் உன் திருவருள் தான் வேண்டும்" என்கிறார் ஓர் அருளாளர். மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும். அதேவேளை பிரார்த்தனைகள் நம்மை மேலும் தூய்மையுடையோராக்குகின்றன.

மனிதப்பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதல், என்கிறார் நாவலர் பெருமானம் ஆலயமும், பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை நாம் அடையப்பெறுதலுக்கு உறுதுணையாக விளங்குகின்றன என்பதை உணர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

- கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்த நிதியுதவி நல்கிய கற்பகன் மீளா அடியவர்கள்.
- கும்பாபிஷேகக் கிரியைகளை பக்தி சிரத்தையுடன் நடாத்திய வணக்கத்திற்குரிய பிரதமகுரு சிவஸ்ரீ.ச.மு.பாஸ்கரக்குருக்கள் அவர்கள்.
- பிரதம குருக்களுடன் இணைந்து கும்பாபிஷேகத்தினை மேன்மையுற வைத்த ஏனைய அந்தன சிவாச்சாரிய பெருந்தகைகள்.
- கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய தேவஸ்தான குரு, மற்றும் அவரின் குடும்பத்தினர்கள்.
- கும்பாபிஷேகப் பத்திரிகையை இலவசமாக வெளியிட்டு உதவிய கற்பக விநாயகர் அச்சக உரிமையாளர் திரு.ஜெயக்குமார் அவர்கள்.
- யாகசாலைகளைத் தந்துதவிய ஆலயத் தர்மகர்த்தாக்கள்
- அஷ்டப்பந்தனத்தினை வழங்கியதோடு, ஆசாரியராகவிருந்து அதனை சாத்திய திரு.செ.சக்திவேல் அவர்கள்.
- கும்பாபிஷேகத்தினத்தில் மங்கள வாத்திய குழுவினரின் இனிய மங்கள இசைக்கு அனுசரனை வழங்கிய திரு.பொ.கங்காதரன் அவர்கள்.
- ஒலி அமைப்பை சிறந்த முறையில் வழங்கிய கண்ணன் சவுண்ஸ் உரிமையாளர் திரு.தங்கராசா அவர்கள்.
- தேவஸ்தான தவில்வித்துவான் திரு.இ.கண்ணன் குழுவினர்
- இறை அலங்காரங்களை சிறந்த முறையில் மேற்கொண்ட சிவஸ்ரீ.சுந்தரராஜக் குருக்கள் அவர்கள்.
- பூமாலைகள், பூச்சரங்களை வழங்கி உதவிய திரு.க.சரவணபவன் அவர்கள்.
- கருங்கற்கள், மட்டச்சீற்கள், பெயின் வகைகளை இலவசமாக வழங்கி உதவிய திரு.வே.பொன்னம்பலம் அவர்கள்.
- கூரைக்கான இரும்புக் கேடர்களை சிறந்தமுறையில் ஆக்கிப் பொருத்தி உதவிய திரு.சி.பகீரதன் அவர்கள்.
- மண்டபக் கூரைக்கு மட்டச்சீற்களை இலவசமாக பொருத்தி உதவிய திரு.ச.தவேந்திரன் அவர்கள்.
- ஆலய வீதிகளை மிகவும் சிறந்த முறையில் சுத்தம் செய்ய உதவிய திரு.பொ.கங்காதரன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆலய வர்ண வேலைகளை அழகுறச் செய்ததோடு, விநாயகர் திருவுருவங்களை இலவசமாக வரைந்து உதவிய திரு.உ.பேரினமூர்த்தி அவர்கள்.
- இலவசமாக லாண்ட்மாஸ்ரர் சேவையை வழங்கிய திரு.சோ.சதானந்தன், திரு.லிங்கேஸ்வரன்.
- எமது ஆலய சகல நிகழ்வுகளையும் சிறந்தமுறையில் ஒளிப்பதிவு செய்து வழங்கி ஆவணப்படுத்தும் திரு.வே.புலேந்திரன் அவர்கள்.
- கும்பாபிஷேக நினைவாக வெளியிடப்படும் கும்பாபிஷேகமலருக்கு ஆசிச்செய்தி, பாமாலை கட்டுரை வழங்கிய குருக்கள், சுவாமிகள், பெரியோர்கள், அன்பர்கள்.
- கும்பாபிஷேக மலருக்கு விளம்பரங்கள் மூலம் நிதியுதவி நல்கிய வர்த்தகப் பெருமக்கள்.
- விளம்பரங்களை சேகரித்து உதவிய திரு.பொ.பத்மாதரன், திரு.பொ.கருணாகரன் அவர்கள்.
- மலருக்கான அட்டைப்படத்தை வடிவமைத்ததோடு மலர் ஆக்கத்தில் பெரும்பங்கேற்ற செல்வன். க.சுவர்ணன்.
- மலரை சிறந்த முறையில் அச்சேற்றிய சங்கானை சாயிராம் பிறிண்டேர்ஸ்.
- அமரர்.கந்தையா கந்தையா பரமேஸ்வரி தம்பதிகளின் ஞாபகார்த்தமாக வாகனசாலையினை அமைத்து வாகனங்களை பாதுகாக்க வழிசெய்த அவர்களின் குடும்பத்தினர்கள்.
- அமரர்.கா.முருகேசபிள்ளை (தயானம்வைத்தியர்) ஞாபகார்த்தமாக "கற்பக கணேசகுண்டம்" தீர்த்தக்கேணியை நிர்மானித்த திரு.கா.தவபாலன் குடும்பத்தினர். எல்லாவிற்கும் மேலாக இம்மலரை வெளியிட பெரும்பங்கேற்ற திரு.பொ.கங்காதரன் அவர்கள்.

அன்னவர்க்கும் நிறைவான நன்றிகளைத் தெரிவிப்பதோடு, கற்பகன் திருவருளால் யாபேரும் இனிதுவாழ கற்பகன் திருவடிகளைப் பணிந்து வணங்குகின்றோம்.

### நால்வர்

பாலை உண்டு அருள் பெற்றவர்- ஞான சம்பந்தர்
சூலை நோய் கண்டு ஆட்கொள்ளப்பட்டவர்- திருஞாவுக்கரசர்
ஓலை கொண்டு தடுத்தாட் கொள்ளப்பட்டவர்- சுந்தரர்
நூலை கொண்டு திருவருள் அடைந்தவர்- மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PARAGON TRADING COMPANY
Importers and Dealers in all kinds of Hardware

8B, 8C, Abdul Jabbar Mawatha
Colombo 12.
Tel: 2433006, 2434749

Fax : 2433006 Grams : GULISTANS

ARUNA
ENTERPRISES

ARUNA ENTERPRISES (PVT) LIMITED

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

Tel : + 94 11 2440961, 2421950
Fax : + 94 11 2438902
Email : arunaeps@sltnet.lk

337, Old Moor Street,
Colombo - 12.
Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AJANTHA STEELS

**Importers and General Hardware Merchants**

265/A, Ground Floor, Old Moor Street,
Colombo - 12, Sri Lanka.
Tel : 011 2448583, 011 2435121
Fax : 011 2435121
E-mail : ajanthasteel@sltnet.lk



ALLIED

# Allied Steel Company
# Allied Enterprise (Pvt) Ltd.

**121A, Mahavidalaya Mawatha (Barber Street) Colombo - 13**
**☎ : 2332085 / 2454673 Fax : 2324887**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ELLORA STEEL

# ELLORA STEEL

Importers & General Hardware Merchants

No. 314 1/5, 1st Floor
Old Moor Street, Colombo - 12
Tel : 2435537
Fax : 2441689
E-mail : ellora2009@hotmail.com

# பேள் நியூ பசன் கவுஸ்

Pearl New fashion House

அனைத்து வகையான பரிசுப் பொருட்களும், பான்,
கிறைண்டர், கதிரைவகைள், அலுமாரி, கணனி அலுமாரி,
மெத்தை, குக்கர் மற்றும் அனைத்தும்...

பிரதான வீதி,
சங்கானை.

Main Street,
Chankanai

# கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்

பலசரக்குப் பொருட்கள்,
அபிஷேகப்பொருட்கள், மற்றும் கேக் வகைகள்
அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்
*பிரதான வீதி, சங்கானை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW MEDI PLUS PHARMACY & GROCER

மருந்துப்பொருட்கள், ஆயுள்வேத எண்ணெய்கள்,
பால்மா வகைகள், ஐஸ்கிறீஸ் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

147, பிரதான வீதி,
சங்கானை.




# சங்கானைப்பாமசி

மருந்துப்பொருட்கள், ஆயுள்வேத எண்ணெய்கள்,
பால்மா வகைகள், ஐஸ்கிறீஸ் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

பிரதான வீதி, சங்கானை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் மர அரிவுகாளை

**தொல்புரம் கிழக்கு,**
**சுழிபுரம்**

# கஜானன் கண்ணாடி கடை

**பிராதான வீதி, சங்கானை**




# பாபா வெதுப்பகம்

**பாண். பணிஸ், கேக் விற்பனையாளர்**

gpujhd tPjp>
rq;fhid.

பிரதான வீதி,
சங்கானை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜன் காட்வெயர்

407, பிரதான வீதி, பருத்தித்துறை

தொ.இல. 0212264327

# V.மனோகரன் காட்வெயர்

சாவகச்சேரி றோட், மந்திகை,

புலோலி

தொ.இல.0212264192

# Ganesha

## Building Materials Sales Centre

Read.No: 0099
No.276 Kandy Road.

Chavakachcheri
T.P & Fax: 2263237

Dealers in:- Electrical goods, Paint & Electrical Contractors.
Jaffna Road, Nelliady, Karaveddy.

# விவா மின்பொருள் இரும்பு வாணிபம்

## VEVA ELECTRICAL & HARDWARE STORES

கைதடி சந்தி,
கைதடி.

Kaithady Junction,
Kaithady.
T.P No, 0213216341




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Pakiyaratnam Hardwar Stores**
163-165 Main Street, Chankanai
Tel No. 0213212713- 0212250105

**Tharan trader**
130-132 Stanly Road, Jaffna
Tel No. 021 2222664
Fax:- 0212227184

**Jet Steet (P.V.T) Ltd.**
247 Oid Moor Street, Colombo.
Tel No. 011 4734549

**கே.எஸ்.பாக்கியலக்சுமி**
ஜொயினரி வேக்ஸ்
டச்சு வீதி, தொல்புரம் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரகாஸ் சென்ரர்

சிவலிங்கப் புளியடி
யாழ்ப்பாணம்

# திலக்சன் இரும்பகமும் களஞ்சியமும்

Thilakson Hardware & Store

A9 Highway
Kaithady Junction,Kaithady.
Tel No. 0214920725

A 9 நெடுஞ்சாலை
கைதடி சந்தி, கைதடி.

ஸ்ரீராம ஜெயம்

# Jeya Krishna

No. 20 K.K.S Road,
Chunnakam.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள்

Ramco

கூரைத்தகடுகள் மற்றும் சீலிங் தகடுகளை
மட்டுமே தெரிவு செய்யவேண்டியது

# ஏன்?

- உறுதியிலும் நீடித்த பாவனையிலும் முதலிடம்
- உயர் தர மூலப்பொருட்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்திலான உற்பத்தி
- தேசிய மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்
- அனைவருக்கும் கட்டுப்படியாகும் சாதாரண விலை
- நாடெங்கிலும் பெற்றுக்கொள்ளும் வசதி.






கூரை மற்றும் சீலிங் தகடுகள்

தொலைபேசி: 011-2471143-4, 011-4619949, 011-4619959

ராம்கோ - சக்தியின் புதிய அலை

MEDIA STATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாய்ராம் பிறிண்டேர்ஸ் சங்கானை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org